Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 228 | செவ்வாய்க்கிழமை 12 ஜூலை 2022 | ஆனி 28 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 + IV | விலை : ரூ. 50




### நாடாளுமன்றம் வெள்ளிக்கிழமை கூடுகிறது

# ஜூலை 20 இல் புதிய ஜனாதிபதி!

### சஜித், டலஸ், ரணில் களத்தில்?

**கொழும்பு, ஜூலை 12**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னரே அறிவித்தவாறு நாளை பதவி விலகல் கடிதத்தை சபாநாயகரிடம் ஒப்படைத்தால், எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கும், எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கும் நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

11 ➤

## தீவைப்புக்கு ஹக்கீமே காரணம்!

### ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 12

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமினாலேயே எனது வீடு தீக்கிரையாக்கப்பட்டது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

11 ➤

## 'கோத்தா வெளிநாட்டில்; இல்லை, இலங்கையிலேயே!'

### உளறிக்கொட்டிய சபாநாயகர் மஹிந்த யாப்பா

கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, மக்கள் புரட்சியை அடுத்து தலைமறைவாகியுள்ள நிலையில், அவர் அயல்நாடொன்றில் தஞ்சமடைந்துள்ளர் என்று சபாநாயகர் மஹிந்த

10 ➤

## இடைக்கால ஜனாதிபதி; சஜித்தை நியமிக்க முடிவு

### ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

கொழும்பு, ஜூலை 12

இடைக்கால ஜனாதிபதி பதவிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நியமிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு

11 ➤

## பெற்றோல், டீசல் கப்பல்கள் வருகை

கொழும்பு, ஜூலை 12

டீசல் கப்பல் ஒன்று எதிர்வரும் 15 - 17 ஆம் திகதிகளில் வருவதற்கும், பெற்றோல் கப்பல் 22-24 ஆம் திகதிகளில் வருவதற்கும் ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு

11 ➤

## எரிபொருள் வரிசையில் நின்றவர் உயிரிழப்பு!

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூலை 12

வவுனியாவில் பெற்றோல் வரிசையில் நின்று இளைப்பாறுவதற்காகச் சென்றவர் மயங்கி விழுந்து நேற்று உயிரிழந்துள்ளார்.

வவுனியா - கொக்குவெளிப் பகுதியைச் சேர்ந்த 44 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வவுனியா, மருத்துவமனைக்கு அண்மையில் அமைந்துள்ள

11 ➤

## வீட்டிலிருந்தே எரிபொருளுக்கு முற்பதிவு செய்வதற்கு வசதி

### யாழ். மாவட்டத்தில் அறிமுகம்

யாழ்., ஜூலை 12

வீட்டிலிருந்தவாறே இணையம் ஊடாக எரிபொருளுக்கு முற்பதிவு செய்து கொள்ளமுடியும். அதற்கான இணையத்தளம் யாழ். மாவட்டச் செயலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாவட்டச் செயலகம் விடுத்

11 ➤

## இந்திய மீனவர்கள் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 12

காரைநகர் கடற்பரப்புக்குள் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆறு இந்திய மீனவர்கள் நேற்றுமாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

11 ➤

## சுமுகமுறையில் ஆட்சி மாற்றம்!

### ஐ.நா. பொதுச் செயலர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 12

அனைத்துத் தரப்பினரும் பேச்சு நடத்தி இலங்கையில் சுமுகமான முறையில் ஆட்சி மாற்றம்

11 ➤

### பேக்கரி உற்பத்தியாளர்களுக்கு

## மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் வழங்கல்!

### மாவட்டச் செயலர் மகேசன் தகவல்

யாழ்., ஜூலை 12

யாழ். மாவட்ட பேக்கரி உற்பத்தியாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை பெற்றுக்கொள்ள விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக

11 ➤

## முப்படைத் தளபதிகளை சந்தித்தார் கோத்தாபய?

கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுக் காலை முப்படை தளபதிகளை சந்தித்துள்ளார் என கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி மக்கள் கிளர்ச்சியைத் தொடர்ந்து இலங்கையின் கடற்பரப்புக்குள் கடற்படை கலமொன்றில் தங்கியிருந்ததாகக்

11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### நாட்டின் அரசியல் அமைதியின்மை

# நாணய நிதியத்துடனான பேச்சுக்களுக்கு பாதிப்பு

### மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 12**

**இலங்கையின் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களைப் பாதிக்கும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீர சிங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 13ஆம் திகதி பதவிவிலகத் திட்ட மிட்டுள்ளார். பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவும் பதவி விலகத் தயார் என்று அறிவித்துள்ளார். எனி னும், குறிப்பிட்ட ஒரு திகதியை அவர் அறிவிக்கவில்லை. ஒட்டு மொத்தத்தில் நாட்டில் தற்போது அரசியல் அமைதியின்மை நில வுகின்றது. உண்மையில் இந்த நிலைமை இதுவரை நாங்கள் கண்ட பல்வேறு முன்னேற்றங் களைப் பாதிக்கலாம். குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் ஆரம்பித்த பேச்சு இந்த நிலை மையால் பாதிக்கப்படும். எனவே, இந்தப் பின்னடைவைத் தவிர்க் கும் வகையில் கூடியவிரைவில் உறுதியான நிர்வாகமொன்று அமையவேண்டும் என்று நான் விரும்புகின்றேன். தொழில்நுட்ப அளவில் நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக் கப்பாட்டுக்கு வந்துள்ளோம். ஆனால், கொள்கையளவில் உறுதியான நிர்வாகத்திடமிருந்து அதிகளவு அர்ப்பணிப்பு அவசி யம் - என்றார்.

இந்தியாவின் ரிசேர்வ் வங்கியுடன் ஒரு மில்லியன் டொலர் நாணய இடமாற்று பேச்சு தற்போது இடம் பெறுகின்றன. ஜன வரியில் இந் தியாவிடமிருந்து இலங்கை 400 மில்லியனை பெற்றுக்கொண் டது.

அதன் பின்னர் இரு கடனுதவிக ளாக 1.5 பில்லியன் டொலரைப் பெற்றது. நாங்கள் மற்றுமொரு ஒரு பில்லியனுக்காக தற்போது பேச்சை ஆரம்பித்துள்ளோம் - என்று அவர் மேலும் தெரிவித் தார். (ம)

## போராட்டத்தில் இணைந்த பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, ஜூலை 12

கடந்த 9ஆம் திகதி மஹரகமவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் இணைந்துகொண்ட பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்றுக் அதி காலை, காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் நின்றுகொண்டிருந்தபோது கோட்டை பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார் என்று தெரி விக்கப்படுகிறது.

இந்த அதிகாரி பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றுபவர் என்றும், உத்தியோகபூர்வ உடைகள் மற்றும் காலணிகளை அணிந்து சந்தே கத்துக்கிடமான வகையில் போராட்டம் நடந்த இடத் தில் தங்கியிருந்தமையால் அந்த அதிகாரி கைது செய்யப்பட்டார் என்று கோட்டை பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பொலிஸ் பிணையில் விடு விக்கப்படுவார் என்றும், பொலிஸ் தலைமையகம் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## ரணிலின் வீடு எரிக்கப்பட்டமைக்கு அரசியல் நோக்கங்களே காரணம்!

### ருவான் விஜயவர்தன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 12

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சொந்த மான வீடு எரிக்கப்பட்ட பின்னணியில் வேறொரு அரசியல் நோக்கமுள்ளது என்று ஐக்கிய தேசி யக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜய வர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிக்கப்பட்ட ரணிலின் வீட்டுக்கு வருகை தந்து ஊடகவியலாளர்கள் வினவிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பிரதமர் ரணிலின் வீடு எரிக்கப்பட்டமைக்கு போராட்டத்தைக் காரணம்காட்ட முடியாது.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் வேறொரு அரசியல் நோக்கமுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பம் முதலே அமைதிப் போராட்டத்துக்கு ஆதரவளித்து வருகின்றது. இலங்கை மக்களின் போராட்டத்தை நினைக்கும்போது நாம் பெருமி தம் கொள்ளும் அதேநரம், தனிப்பட்ட வீடுகள் இவ்வாறு எரிக்கப்படுவதை ஒருபோதும் நியா யப்படுத்த முடியாது.

இதேவேளை- ரணிலின் வீட்டை எரிக்க ஆள் களைக் கொண்டு வருமாறு வேறொரு அரசியல் கட்சி பகிரங்கமாக கூறியது -என்றார். (ம-14-இ)

## ராஜபக்சக்களை அழையுங்கள் ஆனால் திறைசேரி மிகக்கவனம்

### இந்தியாவுக்கு ஜே.வி.பி. அறிவுரை

கொழும்பு, ஜூலை 12

ராஜபக்சக்களை இந்தியா பாதுகாக்க முயற்சித்தால், அவர்கள் தங்கள் நாட்டுத் திறைசேரியை பாதுகாத் துக்கொள்ள நேரிடும் என மக்கள் விடுதலை முன் னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் மூத்த உறுப்பின ரான பிமல் ரத்நாயக்க ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

ராஜபக்சக்களைப் பாதுகாக்க இந்திய இராணுவத்தை அனுப்பவேண்டுமென பாரதிய ஜனதாக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான சுப்ரமணியம் சுவாமி கூறியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

ராஜபக்சக்களை இந்தியா மீட்டுச் சென்றால் அதற் கான செலவுகளையும் இந்த நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்வர். ஆனால், ராஜபக்சக்களை அழைத்துச் சென்ற பின்னர் இந்தியா, திறைசேரியை கவனமாகப் பார்த்துக்கொள்ள நேரிடும் என்றும் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## ஜனாதிபதி மாளிகை பணம் நீதிமன்றத்தில்

கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி மாளிகையில் இருந்து பொதுமக் களால் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்ட சுமார் 17 மில்லியன் ரூபா நீதிமன்றில் ஒப் படைக்கப்படவுள்ளது.

கடந்த 9ஆம் திகதி நடந்த ஆர்ப்பாட்டத்தை யடுத்து, மக்கள் ஜனாதிபதி மாளிகை, ஜனா திபதி செயலகம் மற்றும் அலரி மாளிகை ஆகியவற்றுக்குள் பிரவேசித்திருந்தனர்.

ஜனாதிபதி மாளிகையில் இருந்த ஒரு கோடி 78 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை அவர் கள் மீட்ட நிலையில், அதை உரிய வகை யில் கொழும்பு கோட்டை பொலிஸாரிடம் கையளித்திருந்தனர். அதையடுத்து அந்தப் பணத்தை நீதிமன்றில் பாரப்படுத்துவதற் கும் அது தொடர்பான சமர்ப்பணங்களை முன்வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

## ஜனாதிபதி வேட்பாளராக அநுர முன்மொழிவு

### பெரமுன கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி வேட்பாளராக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் பெயரை பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் குழு முன்மொழியவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

இதுதொடர்பாக பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் கள் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதாக சிங்கள ஊடகமொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ய)

## ஜனாதிபதியாக ரணில் பதவியேற்கச் சதி?

கொழும்பு, ஜூலை 12

நாளை ஜனாதிபதி கோத்தாபய பதவி விலகியதன் பின்னர், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்க திட்டமிட்டுள்ளார் என்று கட்சித் தலைவர்கள் சந்தே கம் வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது பதவி விலகல் திகதியை பிர தமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடி எடுத்ததாகவும், எதிர்வரும் 13ஆம் திகதி பதவி விலக ஜனாதிபதி தீர்மானித்ததன் பின்னணியில் ரணில் விக்கிரம சிங்க இருப்பதாக கட்சித் தலை வர்கள் மத்தியில் தகவல்கள் கசிந் துள்ளன.

13ஆம் திகதி போயா என்பதால், அன்றைய நாளில் நாடாளு மன்றத்தைக் கூட்ட முடியாது என் பதால் ஜனாதிபதி பதவி விலகியதன் பின்னர் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவிப் பிரமாணம் செய்து அன்றைய தினமே புதிய அமைச்சரவையை நியமிக்க பிர தமர் ரணில் விக்கிரமசிங்க திட்ட மிட்டுள்ளார் என்று சந்தேகிக்கப் படுகின்றது.

இதனால் இன்றையதினம் அவ சரமாக நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டுமென்று கட்சித் தலை வர்கள் சபாநாயகரை வலியுறுத்தி



வருகின்றனர் என்றும் தெரிய வருகின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சி அரசின் ஜனாதிபதி சஜித்?

## பிரதமர் பதவியைக் கைப்பற்றி ஆட்சியமைக்க ஐ.ம.ச. வியூகம்

**கொழும்பு, ஜூலை 12**

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சர்வகட்சி அரசாங்கத்தின் பிரதமராக உடனடியாகப் பரிந்துரைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர் மானித்துள்ளது. ஏனைய கட்சிகளுடனும் இது தொடர்பில் பேச்சு முன்னெ டுக்கப்படவுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவிவிலகி சர்வகட்சி அரசை அமைக்கவேண்டும் என்பது அர சியல் கட்சியின் கோரிக்கையாக மாத்திரமன்றி, இலங்கை சட்டத் தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சர்வமதத் தலைவர்களினதும் கோரிக்கை யாக இருந்தது.

ஜனாதிபதியும், பிரதமரும் பதவி விலகினால் எதிர்க்கட்சித் தலை வர்தான் புதிய பிரதமராகும் நிலை பல நாடுகளிலுள்ளது. இலங்கையில், தற்போதுள்ள அர சமைப்பின் பிரகாரம் சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக பதவிவகிக்க முடியும். அதன்பின்னர் நாடாளு மன்றத்தில் பெரும்பான்மை விருப்பத்தைப் பெறுபவர் எஞ்சிய காலத்துக்கு ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும்.

அதற்கமைய சர்வகட்சி பெரும் பான்மையுடன் எதிர்க்கட்சித் தலைவரை உடனடியாகப் பிரதமராக நியமிப்பதே எமது நிலைப்பாடாகும். அதன் பின் னர் அனைத்துக் கட்சிகளின் பங்கேற்புடன் சர்வகட்சி அரசாங் கம் அமைக்கப்படும். ஜே.வி. பி.க்கும் இதற்கான அழைப்பை விடுத்திருக்கின்றோம். அவர்கள் நாட்டின் எதிர்காலத்துக்காக சிந் தித்துச் செயற்படுவர் என எதிர் பார்க்கின்றோம் -என்றார்.

சஜித் பிரேமதாஸவை தற்போது பிரதமராக நியமித்தால், அரச மைப்பின் படியும் அவர் ஜனா திபதியாகுவதற்கு வாய்ப்புக்கள் பிரகாசமடையும். இந்த நிலை யிலேயே அவசரமாக அவரை பிரதமராகக் கொண்டுவருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முனைப்புக் காட்டுகின்றது என்று தெரிய வருகின்றது. (ய)

## போராட்டக்காரர்களை இலக்குவைத்து நாம் துப்பாக்கிச்சூடு நடத்தவில்லை!

### சிறிலங்கா இராணுவம் விளக்கம்

கொழும்பு, ஜூலை 12

போராட்டக்காரர்களை நோக்கி, இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக காணொலிகள் வெளியாகியுள்ள நிலையில், 'போராட்டக்காரர்களை இலக்குவைத்து இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை' என்று இராணுவம் விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பில் இராணுவம் மேலும் தெரிவித்ததாவது:-

'கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போராட்டத்தில் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் பல வந்தமாக நுழைய முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவப் படையினர் வேண்டுமென்றே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என்று வெளியான இந்த சமூக ஊடகச் செய்திகளை இராணுவம் கடுமையாக நிரா கரிக்கிறது.

மேலும் போராட்டக்காரர்கள் வளாகத்துக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக இராணுவம் தடுப்பு உத்தியாக வானத்தை நோக்கியும் ஜனாதிபதி மாளி கைக்குள் நுழையும் பிரதான வாயிலின் பக்கவாட்டு சுவரிலும் பல தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டது. போராட்டக்காரர்களுக்கு காயம் ஏற்படுத்தும் நோக்கில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்படவில்லை' -என்றுள்ளது. (ய)

## ஜனாதிபதிக் கதிரையில் ரணிலை அமரவிடோம்

### போராட்டக்காரர்கள் சபதம்

கொழும்பு, ஜூலை 12

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, ஜனாதிபதி கதிரை யில் அமர்வதற்கு ஒருநாள்கூட அனுமதிக்க மாட்டோம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கோத்தாபய ராஜபக்ச சென்றவுடன் ஜனாதிபதிக் கதி ரையில் அமரலாம் என ரணில் ஒருபோதும் நினைக்க முடியாது. ரணிலை ஜனாதிபதியின் கதிரையில் ஒரு நாளேனும் அமர விடமாட்டோம். அதை அவர் நினைத் துக்கூடப் பார்க்கக்கூடாது -என்றனர். (ம)



## பொதுமக்கள் கிளர்ச்சியால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக விசாரிக்குக!

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உத்தரவு

கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் ஜனா திபதி செயலகம் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள சேதங் கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உத்தரவிட்டார்.

கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திர குமார மற்றும் மேல் மாகாண குற்ற விசாரணைப் பிரி வின் பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரோஹான் பிரேமரத்ன ஆகியோருக்கு அவர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

சூம் தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேற்படி உத்தரவை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் ஜனா திபதி செயலகம் ஆகியவற்றுக்குள் சென்றவர்கள் அங்குள்ள சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தி யுள்ளதாகவும் பெறுமதியான பொருள்களை திரு டிச்சென்றுள்ளனர். உடனடியாக இது சம்பந்தமாக விசாரணை நடத்தப்படவேண்டும். சாட்சியங்கள் அழிக்கப்படும் முன்னர் சாட்சியங்களை சேகரிக்க வேண்டுமெனவும் தென்னக்கோன் கூறியுள்ளார்.


எனினும் ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்குள் சென்றவர் கள், அங்கு எடுத்த காணொலிகள், புகைப்படங்கள் போன்றவற்றை சமூக வலைத்தளங்களில் வெளி யிட்டுள்ளனர். அந்தக் காணொலிகளில் பொருள் கள் சேதமாக்கப்பட்டமைக்கான தடயங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)




**கொழும்பில பெரும் அரசியல் சதுரங்கம் நடக்கத் தொடங்கியிருக்கு. இன்னும் கோத்தா தன்ர பதவியை உத்தியோகபூர்வமா ரிசைன் பண்ண முதலே, 'அடுத்த ஜனாதிபதி ஆர்?' எண்ட சங்கீதக் கதிரைப் போட்டி அமோகமா நடக்குது. இவ்வளவு நாளும் ரணிலின்ர கனவா இருந்தது இந்த ஜனா திபதிப் பதவிதான். ஏதோ தெய்வாதீனமா இப்ப கோத்தா விலகுறதால் ஓட்டோமெட்டிக்கா அந்தப் பதவி தனக்கு வந்திடும் எண்டுதான் அவர் கனவில இருந்தவர். அதுக்கேத்தபடிதான் அவர் காயும் நகர்த்தினார். என்னதான் பிரதமரா இருந்தாலும், பெற்றோல் கொண்டு வாறதைப் பற்றியோ, டொலர் பிரச்சினையைத் தீர்க்கிறது பற்றியோ, விலையளைக் குறைக்கிறதைப் பற்றியோ ரணில் மினக்கெடேலை. அரசாங்கம் விட்ட பிழையளை அடுக்கிக் கொண்டே போறதிலையும், ஒரு சாத்திரி மாதிரி இன்னும் இவ்வளவு காலத்தில நாடு பஞ்சத் தில அடிபட்டு, எல்லாமே நாசமாப் போகப் போகுது எண்டும் தான் சொல்லிக் கொண்டிருந்தவர். அப்பிடி ரணில் சொல்லச் சொல்ல, சனத்துக்கு கோத்தாபய மேல இன்னும் கோபம் வந்ததின்ர விளைவுதான், இப்பிடி ஒரே நாளில ஜனாதிபதி மாளிகையைப் பிடிக்கிறது வரைக்கும் போனது.**

**ஆனால் ராஜபக்சக்கள் ரணிலை விடக் கெட்டிக் காரர். அவை தங்களுக்கு இல்லாத பதவி ரணிலுக் கும் கிடைக்கக்கூடாது எண்டதில தெளிவா இருக் கினம். அதாலதான் ஜனாதிபதி மாளிகை, ஜனாதி பதியின் அலுவலகம் எண்டதுகளைச் சனம் பிடிச்ச அண்டைக்கு இரவே ரணிலின்ர வீட்டுக்கும் நெருப்பு வைக்கப்பட்டது. அதை வைச்சது போராட் டக்காரர் இல்லை. ராஜபக்ச குடும்பம் சொல்லுற எல்லாத்தையும் செய்யிற சேனாதிபதியின்ர 'அவான் கார்ட்' கொம்பனியைச் சேர்ந்த கூலிப்படை யாம். பொலிஸ் பிடிச்ச மூண்டு பேரும் அந்தக் கூலிப்படைக்காரர்தான். இவைதான் முதன் முதலா கோத்தாபயவின்ர மீரிஹான வீட்டைச் சனம் சுத்திவைளைச்ச அண்டைக்கு முன்னுக்கு நிண்ட பஸ்ஸுக்கும் நெருப்பு வைச்சவையாம். ரணிலின்ர வீட்டுக்கு நெருப்பு வைச்சதால ராஜபக் சக்களுக்கு என்னலாபம்?? லாபம் இருக்கு. சனத் துக்கு ராஜபக்சக்கள் மேல மட்டுமில்லை, ரணில் மேலையும் கோபம் இருக்கெண்டு ஒரு மனோ நிலையை எல்லாரிட்டையும் உருவாக்கலாம். அதால ரணிலை ஜனாதிபதி பதவியில இருத்த ஒருத்தரும் சப்போர்ட் பண்ணமாட்டினம். சனத் துக்குப் பிடிக்காத ஆளுக்கு சப்போர்ட் பண்ணினா அவையின்ர வீடுமெல்லோ எரிஞ்சு போடும்.**

**அதைவிட இன்னொரு வேலையும் நடந்திருக்கு. கோத்தாபய ஜூலை 13 ஆம் திகதி பதவி விலகிறது உறுதியெண்டு எனக்கும் சொன்னவர் எண்டு ஒரு அறிக்கையை நேற்றுக்காலமை ரணில் விட்டவர். அதுக்குப் பிறகு எங்கேயோ அநாமதேய இடத்தில இருந்து ஜனாதிபதி செயலக லெட்டர்ஹெட்டில ஒரு அறிக்கையை கோத்தாபய விட்டிருந்தார். அதில 'வேற ஆரும் ஜனாதிபதியைப் பற்றிச் சொல்லு றதை நம்பவேண்டாம். சபாநாயகர் மட்டும்தான் ஜனாதிபதியின்ர உத்தியோகபூர்வ தகவலைச் சொல்லுவார்' எண்டு சொல்லுப்பட்டிருந் திச்சு. 'இனி எங்கட ஆள் ரணில் இல்லை, சபா நாயகர்தான். ரணில் சொல்லுறதை நம்பவேண் டாம்' எண்ட தகவல் அந்த அறிக்கைக்குள்ள ஒளிச்சிருக்குது. அதைவிட ஜனாதிபதி பதவிக்கு சபாநாயகரை சப்போர்ட் பண்ணச் சொல்லி பொது ஜன பெரமுனக்காரருக்கும் அந்த அறிக்கை மூலம் சிக்னல் குடுத்திருக்கிறார் கோத்தா. ஆனால் எல் லாரும் நினைக்கிறதெல்லாம் நடக்கிறேலையே? கடைசியில எல்லாரும் கதைக் கிற மாதிரி பொன்சேகா ஜனாதி பதியா வந்தால்கூட ஆச்சரிய மில்லை பாருங்கோ.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவி விலகுவதை அரசமைப்பு தடுக்கின்றதாம்

## ஐ.தே.கவின் தவிசாளர் வஜிர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

**நாடு தற்போதுள்ள நிலைமையில் அரசமைப்பின் பிரகாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக முடியாது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகினாலும் அரசாங்கத்தைக் கொண்டு செல்வதில் சிக்கல்கள் ஏற்படாது - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.**



போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பதவி விலக வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையிலேயே வஜிர அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிதுள்ளதாவது:-

சிலர் கோருவதைப்போன்று பிரதமரால் பதவி விலகமுடியாது. அரசமைப்புக்கு அமையவே செயற்படவேண்டும். மாறாக பிரதமரை பதவி விலகுமாறு கோருவதானது, அரசமைப்பை மீறிச்செயற்படுமாறு வலியுறுத்துவதைப் போன்றதாகும். இந்த விடயம் தொடர்பில் ஊடகங்கள் தவறாகச் செய்திகளை வெளியிடுகின்றமை கவலைக்குரியது.

அரசமைப்பின் 37ஆவது சரத்தில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் இந்த சரத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறிருக்கையில் இலங்கையில் மாத்திரம் ஏன் பயன்படுத்தமுடியாது? எனவே ஜனாதிபதி பதவி விலகும் பட்சத்தில் தொடர்ந்தும் அரசாங்கத்தைக் கொண்டு செல்வதில் எந்தவித சிக்கலும் கிடையாது -என்றார்.

அதேவேளை, ஜனாதிபதி பதவி விலகும் பட்சத்தில் அரசமைப்பின் பிரகாரம் பிரதமரே அடுத்த ஜனாதிபதியாக பதவியேற்கவேண்டும் என்று அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், பொது மக்கள் பிரதமரையும் பதவி விலகக் கோருவதால் மிகக்குறுகிய காலத்துக்கு சபநாயகரை பதில் ஜனாதிபதியாக நியமித்து, அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை விருப்பைக் கொண்ட ஒருவரை ஜனாதிபதியாக நியமிக்கமுடியும் என்ற மாற்று யோசனை முன்வைக்கப்பட்டு வருகிறது.

கட்சித் தலைவர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டமைக்கமைய தானும் பதவி விலகத் தயார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## அனைத்துக் கட்சி அரசாங்கம் உருவானவுடன் பதவி விலகல்

### பிரதமர் அலுவலகம் தகவல்

கொழும்பு, ஜூலை 12

அனைத்துக் கட்சி அரசாங்கம் தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்ட பின்னரே அமைச்சரவை பதவி விலகத் தீர்மானித்துள்ளது என்று பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அமைச்சர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். அனைத்துக் கட்சி அரசாங்கம் தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டதும், தங்களின் அமைச்சுப் பொறுப்புக்களைக் கையளிக்க அமைச்சர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## ஊடகவியலாளர் மீது தாக்குதல்; எஸ்.ரி.எவ். அதிகாரி பணிநீக்கம்

கொழும்பு, ஜூலை 12

ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில், பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொமேஷ் லியனகே பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்தாத குற்றச்சாட்டிலேயே உடன் நடைமுறையாகும் வகையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொமேஷ் லியனகே பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக வீட்டுக்குப் பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்தபோது கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற அமைதியின்மையை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது தாக்குதலுக்கு இலக்கானவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல சென்ற சில ஊடகவியலாளர்கள் மீதும் பொலிஸார் மற்றும் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் ஆகியோர் மிக கொடூரமாக தாக்குதல் நடத்தியிருந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவங்களில் 7 ஊடகவியலாளர்கள் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (எ-இ)

## நெருக்கடியைப் பயன்படுத்தி ஆள்வோரால் தீர்வு இல்லை

### ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

நாட்டில் நிலவும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் அதைப் பயன்படுத்தி ஆட்சிக்கு வர முயற்சிக்கும் கட்சிகளை அனுமதித்தால் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ராஜபக்ச ஆட்சியால் உருவாக்கப்பட்ட சர்வாதிகாரம் மக்கள் போராட்டத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. போராட்டத்தின் முடிவு குறித்து சிலர் சந்தேகம் கொண்டிருந்தாலும் அதில் பெருவெற்றி கிடைத்துள்ளது. ஜனாதிபதியின் பதவி விலகலால் தற்போதுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படாது. பொருள்களின் விலைகளும் தட்டுப்பாடும் அதிகரித்து வருகின்றதே தவிர குறைவடையவில்லை. இந்த நிலையில் அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்திக்கொண்டு சில கட்சிகள் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றன. அத்தகைய நபர்களை ஆட்சிக்கு வர அனுமதித்தால் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது - என்றார். (ம-14-இ)

## மஹிந்த யாப்பா ஊடாகவே ஜனாதிபதியின் அறிவிப்புகள்

கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் வெளியிடப்படும் அனைத்து அறிவித்தல்களும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஊடாகவே அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் அறிவிப்புக்கள் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டு, அதன்பின்னர் சபாநாயகரால் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் வெளியிடும் அறிவிப்புக்களை மட்டும் ஜனாதிபதியின் அதிகாரபூர்வ அறிவிப்புக்களாகக் கருத வேண்டும் என்றும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 12

'நாட்டின் இன்றைய போக்கும் நமக்கு முன்னுள்ள பொறுப்பும்' என்ற தலைப்பில் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல், நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பல துறைசார் கருத்துக்கள் முன்வைக்கப்படவுள்ள கலந்துரையாடலில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-14)

## சம்பிக்க ரணவக்க -அநுர இடையில் நேற்று சந்திப்பு

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று பத்தரமுல்லையிலுள்ள ஜே.வி.பி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய அரசியல் நெருக்கடி மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் மேலும் பல உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ம-14-இ)

## இலங்கையிலுள்ள சிங்கப்பூர் பிரஜைகள் பாதுகாப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 12

இலங்கையிலுள்ள சிங்கப்பூர் பிரஜைகளைப் பாதுகாப்புடன் இருக்குமாறு சிங்கப்பூர் அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பில்,

இலங்கையில் தங்கியிருக்கும் சிங்கப்பூர் பிரஜைகள் தங்களது பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தி அவதானமாக இருக்க வேண்டும். அத்தியாவசியமற்ற பயணங்களையும், மக்கள் அதிகமாகக்கூடும் இடங்கள், போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் இடங்களையும் தவிர்க்க வேண்டும். செய்திகளை அவதானமாகக் கேட்டு உள்நாட்டு அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவேண்டும். மேலும் இலங்கைக்குப் பயணம் செய்யும் சிங்கப்பூர் பிரஜைகள் கட்டாயமாக முழு அளவில் காப்புறுதி செய்துகொள்ள வேண்டும் - என்றுள்ளது. (ம- இ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ். ராணியில் பயணிக்க பொதுமக்கள் பலர் ஆர்வம்

யாழ்ப்பாணம் - கிளிநொச்சிக்கு இடையிலான குறுந்தூர சிறப்பு ரயில் சேவைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த ரயிலில் பயணப்பட ஆர்வம் காட்டியுள்ளனர்.

இந்த ரயில் சேவை தினமும், 6 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து ஆரம்பிக்கும். மாவிட்டபுரத்திலிருந்து 6.05 மணிக்கும், தெல்லிப்பழையிலிருந்து 6.09 மணிக்கும், மல்லாகத்திலிருந்து 6.14 மணிக்கும், சுன்னாகத்திலிருந்து 6.18 மணிக்கும், இணுவிலிருந்து 6.22 மணிக்கும், கோண்டாவிலிருந்து 6.27 மணிக்கும், கொக்குவிலிலிருந்து 6.31 மணிக்கும் புறப்பட்டு 6.35 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடையும்.

யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் இடையே, புங்கன்குளம் 6.44 மணி, நாவற்குழி 6.50 மணி, தனங்கிளப்பு 6.54 மணி, சாவகச்சேரி 7 மணி, சங்கத்தானை 7.03 மணி, மீசாலை 7.07மணி, கொடிகாமம் 7.12மணி, மிருசுவில் 7.14மணி, எழுதுமட்டுவாழ் 7.21 மணி, பளை 7.30 மணி, ஆனையிறவு 7.42 மணி, பரந்தன் 7.50 மணி, கிளிநொச்சி 7.56 மணிக்கு வந்தடையும்.

மீண்டும், மு.ப. 10 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் இந்தப் புகையிரதம் பளையிலிருந்து 10.31 மணிக்கும், கொடிகாமத்திலிருந்து 10.48 மணிக்கும், சாவகச்சேரியிலிருந்து 11 மணிக்கும் புறப்பட்டு மு.ப. 11.20 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

பிற்பகல் 2 மணிக்கு மறுபடியும் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் இந்தப் புகையிரதம், யாழ்ப்பாணத்திலிருந்து 2.39 மணிக்கும், சாவகச்சேரியிலிருந்து 2.59 மணிக்கும், கொடிகாமத்திலிருந்து 3.11 மணிக்கும் புறப்பட்டு, பளையை 3.38 மணிக்கும், கிளிநொச்சியை 3.56 மணிக்கும் வந்தடைந்து, முறிகண்டியை 4.10 மணிக்கு வந்தடையும்.

மீண்டும் முறிகண்டியிலிருந்து 4.40 மணிக்குப் புறப்படும் இந்தப் புகையிரதம் அறிவியல்நகரை 4.46 மணிக்கு வந்தடைந்து, கிளிநொச்சியிலிருந்து 5 மணிக்கு புறப்பட்டு பரந்தனை 5.06 மணிக்கும், பளையிலிருந்து 5.30 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணத்தை 6.44 மணிக்கும் பின்னர் காங்கேசன்துறையை 7.20 மணிக்கும் ரயில் வந்தடையும். (ம-113)

# எமது கடல்வளத்தை விற்க அனுமதியோம்

## மன்னார் மீனவர்கள் போர்க்கொடி

**மன்னார், ஜூலை 12**

**எமது மீனவர்களுக்குச் சொந்தமான கடல் வளத்தை அந்நிய தேசங்களுக்கு விற்பதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம் என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.**

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழக மீனவர்களின் வருகை என்றும், அத்துமீறிய மீன்பிடி என்பதும் பல வருடங்களாக பேசப்பட்டு வருகின்றது. தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி எமது கடற்கரையோரங்களிலுள்ள வளங்களைக்கூட, தமிழக மீனவர்கள் சூறையாடிச் செல்கின்றனர்.

இதுதொடர்பாக ஏற்கனவே நாங்கள் முறையிட்டும் எமது கோரிக்கையை அவர்கள் செவிமடுப்பதாகத் தெரியவில்லை.

இதனால் நாங்கள் இன்று (நேற்று) அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை முன்வைக்கின்றோம். எமது வளங்களை எமது மக்களுக்காக விட்டு வையுங்கள். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியில் எமது வளங்களை நீங்கள் அள்ளிச் செல்வதால் எமது மக்கள் மீண்டும் மீண்டும் பட்டினிச் சாவை எதிர்கொள்கின்றார்கள். எரிபொருள் இன்மையால் மன்னார் மீனவர்கள் பல மாதங்களாகத் தொழிலுக்குச் செல்லமுடியாத சூழ்நிலையில் காணப்படுகின்றனர். அதுமட்டுமன்றி கடலில் போடப்பட்டுள்ள அவர்களுடைய வலைகளைக்கூட கரைக்குக் கொண்டு வர முடியாத நிலையிலும் உள்ளனர்.

இவ்வாறான நெருக்கடி நிலையை நாம் எதிர்கொண்டுள்ள நிலையில், வடக்கின் பல பகுதிகள் அந்நிய தேசத்தவர்களுக்கு விற்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இங்குள்ள அரசியல் தலைமைத்துவங்கள், இந்த நாட்டு மக்களுக்குச் சொந்தமான வளங்களை அந்நிய நாட்டுக்கு விற்பதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். அவ்வாறு ஒரு நிலை வருமாக இருந்தால் இலங்கையில் தற்போது ஒரு சம்பவம் நடந்தது போன்று வடமாகாணத்தில் இவ்வாறு ஒரு சூழ்நிலை உருவாகும் என்று எச்சரிக்கை விடுக்கின்றோம் -என்றார். (ம-14-213)



## மேலும் இரு குடும்பங்கள் தமிழகத்தை சென்றடைவு

சென்னை, ஜூலை 12

இலங்கையில் இருந்து மேலும் இரு குடும்பங்களைச் சேர்ந்த அறுவர் அகதிகளாக தமிழகத்தை நேற்று சென்றடைந்தனர்.

அகதிகளாகச் சென்றவர்கள் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக, அவர்கள் தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ம-14-27)

## மீண்டும் எகிறியது பாலின் விலை

யாழ். ஜூலை 12

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (யாழ்கோ) எதிர்வரும் 15ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விற்பனை விலையை 170 ரூபாவாக நிர்ணயம் செய்துள்ளது.

பால் உற்பத்தியாளர்களின் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் முகமாக பாலின் கொள் விலையை அதிகரிக்க வேண்டியுள்ளது.

இதனால் பால் விற்பனை விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-14)

### எரிபொருள் நெருக்கடி

## வவுனியாவில் '1990' சேவை முடங்கலாம்

வவுனியா, ஜூலை 12

வவுனியாவில் அவசர நோயாளர் காவுவண்டிச் சேவை (1990 சேவை) எரிபொருள் பற்றாக்குறை காரணமாக முடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.



வவுனியா பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் அமைந்திருக்கும் லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் டீசல் வழங்கப்பட்ட நிலையில், சுமார் 2 கிலோமீற்றர் நீளமுள்ள வரிசையில் '1990 நோயாளர் காவுவண்டி சேவைக்கு' சொந்தமான வாகனங்கள் தரித்து நின்றன. நோயாளர் காவு வண்டிகளுக்கு டீசல் கிடைப்பதில் சரியான பொறிமுறையொன்று உருவாக்கப்படாத பட்சத்தில், நோயாளர் காவு வண்டிச் சேவைகள் முடங்கும் நிலை ஏற்படும் என்று மக்கள் கவலை வெளியிடுவதுடன், இது தொடர்பில் விரைந்து பொருத்தமான தீர்வொன்றை எட்ட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-110)

## ஆஸி. செல்ல முயன்ற 77 நபர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகப் பயணித்த 77 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படை புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று அதிகாலை 2 மணியளவில் மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கடற்பகுதியில் பயணித்த இயந்திரப்படகை கடற்படையினர் சுற்றிவளைத்தனர். இதன்போதே மேற்படி 77 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காக

# பொதுஜன பெரமுன விலகுதல் வேண்டும்

### சுமங்கள தேரர் போர்க்கொடி பஸில் மீது சொற்கணைகள்



**கொழும்பு, ஜூலை 12**

**சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், பொதுஜன பெரமுன உடனடியாக ஆட்சியிலிருந்து விலக வேண்டும் என்று உலப்பனே சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.**

கண்டியில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசியல் தந்திரங்கள் மூலம் பொதுஜன பெரமுனவிடம் தொடர்ந்தும் அதிகாரத்தை வைத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டாம். இந்த நிலை தொடருமாகவிருந்தால் நாட்டில் பெரும் வன்முறை ஏற்படும். இதனால் ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்திருக்க முயற்சிக்கும் இரட்டைக் குடியுரிமை பெற்ற பஸில் ராஜபக்ச அரசியல் சூதாட்டத்தை நிறுத்த வேண்டும்.

பஸில் ராஜபக்ச உட்பட ராஜபக்சவினரின் அடிமையாக இருக்காது நாட்டுக்காக சுதந்திரமாக செயற்படுமாறு கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம். அவ்வாறு செயற்படாவிட்டால் அடுத்த தேர்தல் நடத்தப்படும்வரை எம்மால் காத்திருக்க முடியாது. நாங்கள் பொதுமக்களின் பலத்தை அன்று கொழும்பில் காட்டினோம். இதற்கு அப்பால் சென்று எமது பலத்தைத் காட்டவும் தயங்க மாட்டோம் என்பதைக் குறிப்பாக பஸில் ராஜபக்சவுக்குக் கூற விரும்புகின்றோம் -என்றார்.

(ம-14-இ)

## சபாநாயகரின் பாதுகாப்பு அதிகரிப்பு



கொழும்பு, ஜூலை 12


சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சபாநாயகரின் வீட்டின் பாதுகாப்புக்காக பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். விசேட அதிரடிப் படையினருக்கு மேலதிகமாக, பொலிஸாரும் வீடு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(எ-இ)

## பேருந்து விபத்தில் இருவர் உயிரிழப்பு

### பொதுமக்கள் ஆத்திரம் பேருந்துக்குத் தீ வைப்பு



கொழும்பு, ஜூலை 12

புஸல்லாவை, காச்சாமலை வீடன் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் இருவர் சாவடைந்துள்ளனர். மேலும் சிலர் காயமடைந்துள்ளனர்.

ஆத்திரமடைந்த மக்கள் பேருந்தைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

புஸ்ஸலாவ, பெரட்டாசி தோட்டத்திலிருந்து, புஸ்ஸலாவை நகரத்துக்குப் பயணிகளை ஏற்றிவந்த பஸ்ஸே வீடன் பகுதியில் வைத்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. இதில் மிதிபலகையில் பயணித்த இருவரே உயிரிழந்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் பெரட்டாசி தோட்டத்தில் வசிக்கும் சுரேன்ஜித் புஷ்பகுமார் (வயது 39) மற்றும் ஹெல்போட 7ஆம் கட்டை தோட்டத்தில் வசிக்கும் விஜயகுமார் கவிஷ்கர் (வயது 20) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுமார் 80 பேர் வரை பஸ்ஸில் பயணித்துள்ளனர். அதிகளவான பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்ததாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தால் ஆத்திரமடைந்த மக்கள், பேருந்தைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

(ம-22)

## அழிக்கப்பட்ட நாட்டை ஐ.ம.ச. கட்டியெழுப்பும்

### சஜித் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட பெரமுன அரசாங்கத்தினர் எமது அழகான தீவை அழித்துவிட்டனர். இவ்வாறு அழிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் நாம் தயார் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

சஜித் பிரேமதாஸ வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை உறுதிப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு பங்களிக்கவும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்தை நியமிப்பதற்கும் நாம் தயாராகவுள்ளோம். எனவே இந்த செயற்பாட்டுக்கு எதிராக யாராவது நாடாளுமன்றத்தில் சதிகளை மேற்கொண்டால் அது தேசத்துரோக செயலாகும். அவ்வாறான செயலைத் தவிர்த்து நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் எமக்கு ஒத்துழைக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன்- என்றார்.

(ம-14-இ)

## எரிவாயு சிலிண்டர்கள் விநியோகப் பணி ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 12

நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 3 ஆயிரத்து 700 மெற்றிக்தொன் எரிவாயுவை சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளை லிட்ரோ நிறுவனம் நேற்று ஆரம்பித்துள்ளது. நேற்றும், இன்றும் கொழும்பு மற்றும் சன நெருக்கடி மிக்க பகுதிகளுக்கும் நாளை ஏனைய இடங்களுக்கும் எரிவாயு சிலிண்டர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் லிட்ரோ நிறுவனம் தெரிவித்தது.

அதேநேரம், சமையல் எரிவாயு கொள்கலனை கொள்வனவு செய்யும்போது, கடந்த மே மாத மின்சார பட்டியலை வைத்திருத்தல் அவசியமாகும் என்றும், இதன் மூலம் அதிகளவான எரிவாயு கொள்கலனை பதுக்கி வைக்கும் செயற்பாட்டை தவிர்க்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், லிட்ரோ நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரிக்கு பிரவேசிப்பதன் ஊடாக எரிவாயு விநியோகிக்கப்படும் நிலையங்களை அறிந்து கொள்ளமுடியும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. இதேவேளை, லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை நேற்று முதல் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(எ-இ)

## ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள உணவை இலங்கைக்கு வழங்குதல் பயனுள்ள விடயம்!

### அமெ. இராஜாங்கச் செயலர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 12

உக்ரைனில், ரஷ்யா தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ள 20 மில்லியன் மெற்றிக் தொன் தானியங்களையும், உணவையும் இலங்கைக்கு வழங்கியிருக்கலாம் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்ரனி பிளிங்டன் தெரிவித்தார். உக்ரைனில் உற்பத்தி செய்யப்பட்ட 20 மில்லியன் மெற்றிக் தொன் தானியங்களை ரஷ்யா தற்போது தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளது. இந்தத் தானியங்களையும் உணவையும் விடுவிக்க வேண்டும் என்று பலரும் கோருகின்ற போதிலும் எந்தக் கோரிக்கையையும் ரஷ்யா செவிமடுக்கவில்லை. இந்த நிலையிலேயே அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்ரனி பிளிங்டன் இவ்வாறு தெரிவித்தார். மேற்படி உணவுப் பொருள்களை ரஷ்யா விரைந்து விடுவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வாக்கு வாதங்களைத் தவிர்க்கவும். பணிபுரியும் இடத்தில் மற்றவர்கள் விடயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. எதிர்பார்த்த செயல் இழுபறியாகும். தொழிலில் சிலர் சங்கடத்தை அடைவீர்கள்.

**இடபம்:** புதிய வேலையை எதிர் பார்த்தவர்களுக்கு நல்ல தகவல் வீடு தேடி வரும். உற்சாகத்துடன் செயற் படுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**மிதுனம்:** உடல் நிலையில் இருந்து வந்த உபாதை விலகும். உற்சாக மான நாள். எதிரிகளால் உண்டான பிரச்சி னைக்கு சட்ட ரீதியாக தீர்வு காண்பீர் கள். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கடகம்:** வியாபாரத்தில் புதிய அணுகுமுறையை கையாளு வீர்கள். இலாபம் காண்பீர்கள். குடும்பப் பெரியவர்களின் ஆலோச னையைக் கேட்பீர்கள். செயலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். திட்டமிட்டு செயற்பட்டு ஒரு செய லில் இலாபம் காண்பீர்கள். உங்கள் செயலை மற்றவர்கள் பாராட்டுவார்கள். வெளி வட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கன்னி:** நேற்றைய முயற்சி ஒன்றில் இன்று அனுகூலம், ஆதாயம் உண் டாகும். பணிபுரியும் இடத்தில் உங் கள் ஆலோசனை ஏற்கப்படும். உயர் அதிகாரி பாராட்டுவார். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்:** உங்கள் முயற்சிக்கு தடை யாக இருந்தவர் விலகிச் செல்வர். நன்மையான நாள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். நண்பர்கள் உதவி யுடன் தொழிலை விரிவு செய்வீர்கள்.

**விருச்சிகம்:** திடீர் பயணம் ஏற்படும். அலைச்சல் உண்டானாலும் லாபம் காண்பீர்கள். தொழில் குறித்த இரகசியங்களை யாருக்கும் தெரிவிக்க வேண்டாம். எச்சரிக்கை அவசியம். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**தனுசு:** வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். கவனமாக செயற் பட்டு ஆதாயம் காண்பீர்கள். பணி யாளர்கள் ஒத்துழைப்புடன் உங்கள் முயற்சியில் இலாபம் காண்பீர்கள். திடீர் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** திட்டமிட்ட செயல் எளிதில் நிறை வேறும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். தொழிலில் புதிய பங்கு தாரர்கள் வந்து இணைவார்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும்.

**கும்பம்:** நேற்று வரை நிறைவேறாமல் இருந்த ஒரு செயல் இன்று நிறை வேறும். எதிர்பார்த்த பணம் வரும். புதிய சொத்து வாங்கும் முயற்சி பலித்தமாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட மந்த நிலையை சரி செய்வீர்கள்.

**மீனம்:** வேலைப்பளு அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். பணியாளர்களுக்கு புதிய சுமை உண்டாகும். பணியில் கவனம் செலுத்த முடியாமல் போகும். உறவு களால் சங்கடத்துக்கு ஆளாவீர்கள்.

## இன்று இரதோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
வண்ணை அருள்மிகு ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று, காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும். தொடர்ந்து மு.ப. 10 மணிக்கு விநாயகர் தேரில் ஆரோகணிப்பார். நண்பகல் 12 மணிக்கு பச்சை சாத்தி பஞ்சமுக அர்ச்சனை நடைபெறும். பிற்பகல் ஒரு மணிக்கு அன்னதானம் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (எ-இ)




மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான 32 ஆம் வருட மணவாளக்கோல தின மஹா சங்காபி ஷேகம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை துர்க்காபுரம் சிறீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவசிறீ நவரத்தினம் முகுந்தன் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. (ய-159)

## ஐ.ஓ.சி. எரிபொருள் பவுஸர் வீதியில் கவிழ்ந்து விபத்து



கொழும்பு, ஜூலை 12
பதுளை ஹப்புத்தளை பங்கெட்டிய பகுதியில் ஐ.ஓ.சிக்குச் சொந்தமான எரி பொருள் பவுஸர் நேற்றுக் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

திருகோணமலை ஐ.ஓ. சி. எரிபொருள் நிலையத்திலிருந்து ஹப்புத்தளை எரிபொருள் நிலையத்துக்கு 33 ஆயிரம் லீற்றர் எரிபொருளை ஏற்றிச்சென்ற பவுஸரே இவ்வாறு கவிழ்ந்தது. வீதி வழுக்கியதால் பவுஸர் கவிழ்ந்துள்ளது. இதன்போது எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை விபத்துக்குள்ளான பவுஸரிலிருந்து, அந்தப் பிரதேசமக்கள் எரிபொருளை சேகரித்து வீட்டுக்கு எடுத்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-14)



## யாழ்ப்பாண இராசதானியில் வீரமாகாளி தேரேறி வருகிறார்

■ காரை.எம்.பி.அருளானந்தம்

**வண்ணை. வீரமாகாளியம்பாள் தேர்த்திருவிழா இன்றாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயம் சரித்திரப் பிரசித்தி பெற்றதொரு ஆலயமாகும். தமிழை யும் சைவத்தையும் ஒருங்கே வளர்த்து ஆட்சி செய்து வந்த சக்கரவர்த்திக ளால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆலயம் நல்லூர் இராசதானியின் எல்லைக்கு அண்மையில் இருந்ததால் நல்லூருக் குள் நுழைய முயன்ற அந்நியருடன் நடைபெற்ற போர்கள் பல இப்பகுதியில் நிகழ்ந்ததாக யாழ்ப்பாண வைபவமா லையில் வரும் கூற்றிலிருந்து அறிய முடிகின்றது.

### யாழ்ப்பாண மன்னர்களின் போர்த்தெய்வம் வீரமாகாளி

யாழ்ப்பாண மன்னர்களின் போர்த்தெய்வ மாக வீரமாகாளி அம்மன் விளங்கி யதால் அக்காலத்திலிருந்தே இந்த ஆலயம் சிறப்புப் பெற்று விளங்கி வரு கின்றது. மன்னர்கள் வீரத்தை வேண்டி நவராத்திரி விழாவின் போது தங்கள் படைக்கலங்களை கொலுவில் வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று வெற்றிகளைக் குவித்து வந் தார்கள். இலங்கையில் முதன்முதலில் மஹிசாசுர சங்காரம் நடைபெற்ற அம் மன் ஆலயம் என்ற சிறப்பும் இந்த ஆலயத்துக்கு உண்டு. வடக்குத் திக்கு நோக்கிய வாசல் அமைந்துள்ள வீரமாகா ளியம்மன் ஆலயம் நல்லூருக்கு அண் மையில் அமைந்துள்ளது. வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் காணப்படும் தேர் வரலாற்றுச் சிறப்புமிக்கது. 1941 ஆம் ஆண்டில் இந்தத் தேர் அமைக்கப்பட் டது. இலங்கையில் யாழ்ப்பாணத் தமிழ் ஆச்சாரியார்களால் உருவாக்கப்பட்ட முதல் தேர் இதுவாகும். விநாயகர் ஆறு முகம் என்ற சிற்பாச்சாரியரால் இந்தத் தேர் உருவாக்கப்பட்டதாகும்.

### மஹோற்சவச்சிறப்பு

ஆனிப்பௌர்ணமியை தீர்த்தோற்சவ மாகக்கொண்டு இருபத்தைந்து தினங் கள் உற்சவங்கள் காலை, மாலை விழாக்களாக நடைபெறும். இவ்வாறான வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டு விளங்கும் வண்ணை வீரமாகாளியம் பாளின் தேர்த்திருவிழா இன்று செவ் வாய்க்கிழமை மிகச்சிறப்பாக நடைபெ றுகின்றது. அம்பாள் தேரேறி வருகின்ற திருக்காட்சியைக் காண பெருந்திரளான பக்தர்கள் வண்ணை வீரமாகாளி அம் பாளின் ஆலயத்தில் சங்கமமாகும் காட்சி அற்புதமானது. வீரமாகாளியை வேண்டி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனுக்கு மேலும் இராணுவ உதவிகள்!

## அமெரிக்கா தாராளம் ரஷ்யா ஆவேசம்

கீவ், ஜூலை 12

உக்ரைனுக்கு சுமார் 400 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.



நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முயற்சிகளை அடுத்து, உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. கிழக்கு உக்ரைன் ரஷ்யப் படைகளால் முழுவதுமாகக் கைப்பற்றப்பட்ட போதிலும், இன்னமும் உக்ரைன் சரணடையாமல் போரிட்டு வருகின்றது. இந்த நிலையிலேயே சுமார் 400 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை உக்ரைனுக்கு வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அதிநவீன ஏவுகணை அமைப்புகள், பீரங்கிகள், இராணுவ கவச வாகனங்கள், ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் உள்ளிட்ட திறன் மிக்க ஆயுதங்கள் இந்த 400 மில்லியன் டொலர் பெறுமதியான உதவியில் அடங்கியுள்ளன.

முன்னதாக, ஐரோப்பிய நாடுகளாலோ அல்லது அமெரிக்காவாலோ ரஷ்யாவை இந்தப் போரில் தோற்கடிக்க முடியாது என்றும், பேச்சுக்கு ரஷ்யா தயாராகவே இருக்கின்றது. ஆனால் அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் தொடர்ந்து சீண்டினால் பேச்சுக்கான கதவுகள் அடைக்கப்படும் என்றும் ரஷ்ய அதிபர் புடின் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியா உள்ளிட்ட ஐந்து நாடுகளுக்கான தூதுவர்கள் பணிநீக்கம்

## ஷெலன்ஸ்கி அதிரடி

கீவ், ஜூலை 12



இந்தியா உள்ளிட்ட ஐந்து நாடுகளுக்கான தூதுவர்களை பணிநீக்கம் செய்துள்ளார் உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி.

ஜேர்மனி, இந்தியா, செக் குடியரசு, நோர்வே மற்றும் ஹங்கேரிக்கான உக்ரைன் தூதர்களை பணிநீக்கம் செய்வதாக ஷெலன்ஸ்கி அறிவித்துள்ளார். இதற்கான காரணங்கள் குறித்தும், அவர்களுக்கு வேறு பணிகள் வழங்கப்படுமா என்பது குறித்தும் உக்ரைன் அதிபர் மாளிகை எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

ரஷ்யாவுக்கு எதிரான போரில், உக்ரைனுக்கு சர்வதேசத்தின் உதவிகளைக் கோருமாறும் ஒரு இணைப்புப் பாலம் போன்று செயற்படுமாறும் தனது நாட்டின் தூதுவர்களை ஷெலன்ஸ்கி அண்மையில் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# டொனெட்ஸ்க் நகரில் ரஷ்யா கடும் தாக்குதல்

கீவ், ஜூலை 12

உக்ரைனின் டொனெட்ஸ்க் நகரில் ரஷ்யா நேற்றுமுன்தினம் கடும் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிழக்கு உக்ரைனை முழுமையாகக் கைப்பற்றிய ரஷ்யா, தற்போது டொனெட்ஸ்க் நகரைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக கடும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. இந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் அங்கு கடும் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. ரஷ்ய ஏவுகணைத் தாக்குதலில் சின்னாபின்னமான கட்டங்களின் ஒளிப்படங்களையும் அவை வெளியிட்டுள்ளன. (ம)

# ஷின்சோவை கொலை செய்ய வீட்டிலேயே துப்பாக்கி தயாரிப்பு

## கொலையாளி பரபரப்பு வாக்குமூலம்

டோக்கியோ, ஜூலை12



ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவை கொலை செய்வதற்காக கொலையாளி தன் வீட்டிலேயே துப்பாக்கியைத் தயாரித்துள்ளார் என அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுப்படு கொலை செய்யப்பட்டார். சந்தேக நபர் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் இடம்பெற்ற விசாரணைகளின் அடிப்படையில், ஜப்பானியப் பொலிஸார் பல்வேறு தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

ஷின்சோ அபேவை சுட்டுக் கொன்றவர் ஜப்பான் கடற்படையில் 3 ஆண்டுகளாகப் பணிபுரிந்த டெட்சுயா யமகாமி (வயது- 41) என்பவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தில், "ஷின்சோ அபேயின் அரசியல் எனக்குப் பிடிக்கவில்லை. அவர் மீது அரசியலுக்கு தொடர்பில்லாத பல முறைப்பாடு கள் உள்ளன. அவர் இதுபோன்று பலமுறை தவறுகளைச் செய்துள்ளார். இதற்காக அவரை கொலை செய்ய முடிவுசெய்தேன். இந்த நிலையில், பரப்புரைக்காக ஷின்சோ அபே கிழக்கு ஜப்பானின் நாரா நகருக்கு வரவிருப்பது இணையத்தில் வெளியிடப்பட்டிருந்தது. அவர் பரப்புரை மேற்கொள்ளும் பகுதி களில் பாதுகாப்புக் குறைவாக உள்ள பகுதியான நாரா பகுதியில் நடக்கும் தெருமுனைக் கூட்டத்தை தெரிவுசெய்தேன். நானே வீட்டில் சுயமாகத் தயாரித்த இரட்டைக் குழல் துப்பாக்கியை சட்டையில் மறைத்து வைத்தபடி கூட்டத்துக்குச் சென்றேன்.

கூட்டத்தில் ஷின்சோ அபே பேச ஆரம்பித்தவுடன் துப்பாக்கியை எடுத்து அவரைச் சுட்டுக்கொன் றேன் என்று தெரிவித்துள்ளார். (ச-இ)

# சீனாவின் ஷாங்காய் அனல் நிலையில்

பீஜிங், ஜூலை 12

சீனாவின் ஷாங்காய் நகரில் கடந்த சில நாள்களாக வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ஷாங்காய் நகர் ஜூலை 5 முதல் தொடர்ந்து ஆறு நாள்களாக மிக அதிக வெப்பநிலையைக் காண்கிறது. கடுமையான வெப்பநிலை அதிகரித்து வருவதால், ஷாங்காய் வானிலை ஆய்வு மையம் மக்களுக்கு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. கடுமையான வெப்பத்தைச் சமாளிக்கவும், வெப்பத் தாக்குதலைத் தவிர்க்கவும் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பகல் நேரங்களில் வெளியில் வேலை செய்வதைத் தவிர்க்கவும், அதிக வெப்பநிலையில் வெளியே வரும் தொழிலாளர்கள் தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது. அத்துடன், மாகாணத்தின் சில பகுதிகளில் சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## அநாதரவாக போரிஸ்.......



பிரிட்டன் பிரதமர் பதவியில் இருந்து போரிஸ் ஜோன்சன் விலகியதை அடுத்து லண்டனில் உள்ள புகழ்பெற்ற [illegible] அருங்காட்சியகத்தில் இருந்து அவரது மெழுகுச் சிலை அகற்றப்பட்டு அருங்காட்சியகத்துக்கு வெளியே நடைபாதையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 . 02 . 1929

இறப்பு 16 . 06 . 2019



இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் பொன்னையா இராமநாதபிள்ளை (சின்ராசா)

அப்பா... எம் கனவில் கலந்த உங்கள்
எல்லையற்ற நினைவுகள் நிற்கின்றன நிழலாக உங்களை
இழந்து ஆண்டு மூன்று சென்றாலும்
உங்கள் அன்பு முகமும் நேசப்புன்னகையும்
மறையவில்லை எம்மைவிட்டு
வருடங்கள் நீண்டாலும் உங்கள் நினைவுகள் நீங்காது
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்கள் இதயத்தோட்டத்தில்
பூத்துக் கொண்டிருக்கும் உங்கள் நினைவுகள்

உங்கள் நினைவில் வாடும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(CS 45517) (3/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 30 - 05 - 1985

இறப்பு 11 - 07 - 2022



## செல்வி அனுஷியா மரியநாயகம்

(ஆசிரியர், யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி)

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அனுஷியா மரியநாயகம் (ஆசிரியர், யா/ மானிப்பாய் இந்து கல்லூரி) அவர்கள் நேற்று (11.07.2022) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் மரியநாயகம் நீற்றம்மா தம்பதியினரின் அன்பு மகளும், கிறிஸ்ரியன் அனுஷாந் (ஆசிரியர், யா/ இந்துக் கல்லூரி), அனஸ்ரீன் (உத்தி யோகத்தர், பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை), ஆன்தர்ஷினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், டினேஷினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் சங்கானை) அவர்களின் அன்புமிகு மச்சாளும், ஹெலின் நோறா, ஹெயில் ஜோடன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (12.07.2022) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நவாலி புனித பேதுரு பாவிலு ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக நவாலி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

**076 606 8838, 077 816 9984**

(CS 19957) (3/6)

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லும்



அமரர்

## சின்னத்தம்பி அம்பிகாபதி

(முன்னைநாள் தலைவர், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோயில் (புதுக்கோயில்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (13.07.2022) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந் நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரில் வருகை தந்தவர்களுக்கும், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோயில் நிர்வாக உறுப்பினர்களுக்கும், சமுகத்தினர்க்கும், கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர், ஆசிரியர்களுக்கும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, துண்டுப்பிரசுரம், மலர்வளையம், பதாகைகள் மூலம் துயர் பகிர்ந்த அனைவர்க்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 02 . 1944

மறைவு 11 . 07 . 2022



## நாகராஜா சிவபாக்கியம்

புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மதவடி ஒழுங்கை, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராஜா சிவபாக்கியம் அவர்கள் நேற்று (11.07.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நாகராஜா அவர்களின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்றவர்களான சாந்தினிதேவி, பாக்கியராசா, செல்வராசா, கமலாதேவி மற்றும் ரஞ்சினிதேவி, வரதராசா, தவமணிதேவி, நந்தினிதேவி, சியாமளாதேவி, சித்திராதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான கோபாலப்பிள்ளை, ரதிதேவி, கமலதாசன் மற்றும் ரஞ்சினிதேவி, சிவகிரி, சண்முகநாதன், செல்லத்துரை, காந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கண்ணம்மா, நாகம்மா, யோகம்மா, கனகலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கைராசியின் அன்பு மைத்துனியும், வினோத், சரணிகா, விதுஷன், சாரங்கா, மயூரி, சிபிராஜ், வோபி, தினுஷா, டிக்ஷாந், ரூபினா, ஜீவிதன், சஞ்சீவன், அபிராமி, செந்திரிக்கா, நவநீதா, தயாரூபன், டினேஷ்குமார், கிரிதர், விதுஷா, நிருஜன், காலஞ்சென்ற கிஷானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தவிசன், தஷ்வின், அக்ஷயன், அக்ஷிதா, சாயிசன், சஜிகா, ஆதிரா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2022) மு.ப செவ்வாய்க்கிழமை 11.00 மணியளவில் யாழுப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 1.00 மணிளவில் கேரதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.22 மதவடி ஒழுங்கை,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
**077 191 2975**
(மகள்) - தவமணிதேவி (பிள்ளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு செல்ல முயன்ற தாக்குதலாளி கைதாகினார்

கொழும்பு, ஜூலை 12

கடந்த மே மாதம் 9ஆம் திகதி கொள்ளுப்பிட்டி அலரிமாளிகை மற்றும் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர், சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் தேடப்படும், வெளிநாடு செல்வதற்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றினால் தடை விதிக்கப்பட்டுள்ள ஒருவரே, மலேசியாவுக்கு செல்வதற்காக விமான நிலையத்துக்குச் சென்றபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

43 வயதான அவர் மத்தேகொட பிரதேசத்தில் தற்காலிகமாக வசிப்பவராவார். (ஒ-இ)

# போராட்டக்காரர்கள் மீது நடவடிக்கை வேண்டாம்

## பொலிஸாரிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 12

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட எந்தவொரு பிரஜைக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று போராட்டத்தில் ஈடுபட்ட சிவில் ஆர்வலர்கள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிவில் ஆர்வலர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். இச்சம்பவம் பொதுமக்களின் எழுச்சி என்றும் இதற்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிவில் ஆர்வலர்கள் தெரிவித்தனர். கடந்த 9ஆம் திகதி தேவையின்றி பலரின் உரிமைகள் மீறப்பட்டதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் சார்பில் கலந்துகொண்ட சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர். இதேவேளை- கடந்த 9ஆம் திகதி மக்கள் போராட்டத்தின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஒ-இ)

'கோத்தா...

யாப்பா அபேவர்தன பி.பி.சி. செய்திச் சேவைக்கு தெரிவித்த கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில்,"வாய் தடுமாறி அவ்வாறு கூறி விட்டேன் எனவும் கோத்தாபய நாட்டிலேயே தங்கியுள்ளார்'என்றும் அவர் இந்திய செய்திச் சேவைக்கு நேற்று மாலை தெரிவித்துள்ளார்.

'ஜனாதிபதி கோத்தாபய நாட்டை விட்டு வெளியேறி அயல் நாடு ஒன்றில் தங்கியுள்ளார். அவர் பதவி விலகுவதற்காக புதன்கிழமை நாடு திரும்புவார்' என்று பி.பி.சி.யின் குளோபல் நியூஸ் சேவைக்கு சபாநாயகர் மதியமளவில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் அனைத்தும் சபாநாயகர் ஊடாகவே விடுக்கப்படும் என்பதை ஜனாதிபதி செயலகம் அறிவித்த பின்னரேயே, சபாநாயகர் மேற்கண்டவாறு கூறியிருந்தார். இந்தத் தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், இந்திய செய்திச் சேவைக்கு அவர் வழங்கிய மற்றொரு நேர்காணலில், "முதலில் வாய் தடுமாறி தவறாகக் கூறி விட்டேன். ஜனாதிபதி கோத்தாபய இன்னும் நாட்டிலேயே இருக்கிறார்' என்று கூறி அவர் தனது முதல் தெரிவித்த கருத்தை மறுதலித்தார்.

ஆனாலும், ஜனாதிபதி எங்கே இருக்கிறார் என்பது தொடர்பில் தகவல் எதுவும் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை -கோத்தாபய வெளிநாட்டில் இருக்கும் தகவலை சபாநாயகர் வெளிப்படுத்திய பின்னர், அவருக்கு சில தரப்புகளால் கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவே பின்னர் அவர் தனது கருத்தை மறுத்தார் என்றும் சொல்லப்படுகின்றது.

ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறிய பிறகு கோத்தாபய இலங்கைக் கடற் பரப்பில் கடற்படைக் கப்பல் ஒன்றில் தங்கியிருக்கிறார் என்றே உயர்பாதுகாப்பு வட்டாரங்கள் முன்னர் தெரிவித்திருந்தன. ஆனால், அவர் கட்டுநாயக்கவில் உள்ள சர்வதேச விமானப்படைத் தளத்தில் இருந்து புறப்பட்டு டுபாய் சென்றுள்ளார் என்ற ஒரு தகவலும் கொழும்பு செய்தி வட்டாரங்களில் வெளியாகி இருந்தது குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-இ)

## கோத்தாபய பதவி விலகியதும்

# ஒரு வாரத்துக்குள் புதிய அரசாங்கம்



கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உத்தியோகபூர்வமாக பதவி விலகிய ஒரு வாரத்துக்குள் புதிய சர்வகட்சிக் கூட்டணி அரசாங்கம் அமைக்கப்படவேண்டும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். (ம-14-இ)

**தேவை**

பருத்தித்துறை பாசல் நிறுவனத்திற்கு Bill Cleark தேவை.

(CS 45515 A)(3/6) 076 009 4946

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள பிரபல பலசரக்கு மொத்த வியாபார நிலையத்திற்கு வேலையாள் தேவை (யாழ் நகரிற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

(CS 45515 C)(3/6) 076 009 4946

**தேவை**

யாழ் - கொழும்பு அதி சொகுசு பேருந்திற்கு உதவியாட்கள் தேவை.

(CS 45515 B)(3/6) 076 009 4946

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்ப்பாண மாவட்டச் செயலக திட்டமிடல் கிளையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு.ச.அனீஸ் அவர்களின் பாசமிகு தந்தையார்

**சீவரெத்தினம் சர்வேஸ்வரன்**

அவர்கள் கடந்த 09.07.2022 ஆம் திகதி சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(CR 36641)(3/6)

# காரைநகர் எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் வழங்கும் நடைமுறைகள்!

## எரிபொருள் அட்டை அவசியம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

காரைநகர் -வலந்தலை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இனிமேல் எரிபொருள் அட்டைக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிப்பது என்று காரைநகர் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச செயலகம், காரைநகர் எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகம் மற்றும் காரைநகர் பிரதேசசபை என்பவை இணைந்து நடத்திய கூட்டத்திலேயே மேற்படி முடிவெடுக்கப்பட்டது. காரைநகர், ஊர்காவற்றுறை, சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும். ஒரு நாளில் (அரச பணியாளர்கள் உட்பட) மோட்டார் சைக்கிள்கள் 800, முச்சக்கர வண்டி மற்றும் கார்கள் 300 என்ற எண்ணிக்கையில் பெற்றோல் விநியோகிக்கப்படும்.

வாகனங்களுக்கு வரிசை இலக்கம் (ரோக்கன்) வழங்கப்படும். இதன்போது வரிசையில் காணப்படும் வாகனங்கள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படும். இலக்கம் வழங்கப்படும் போது எரிபொருள் அட்டை கட்டாயமாக வைத்திருக்க வேண்டும்.

வாகனங்களுக்கான வரிசை இலக்கம் வழங்கப்படும்போது வாகன இலக்கம் பதிவுசெய்யப்படும். முறைகேடுகளைத் தடுப்பதற்கு இது உதவும்.

அனைத்து அரச திணைக்களங்களையும் சேர்ந்த அத்தியாவசிய சேவைக்கு உரியவர்களுக்கு மாத்திரம் பிரதேச செயலரின் பரிந்துரையுடன் விசேட வரிசை இலக்கம் (விசேட ரோக்கன்) வழங்கப்படும்.

பெற்றோலுக்கு மொத்தமாக மூன்று வரிசை பேணப்படும். (மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், விசேட வரிசை)டீசல் வாகனங்களுக்கு தனி வரிசை பேணப்படும். (நீர் விநியோக வாகனங்கள், வர்த்தகர் சங்க வாகனங்கள், ஏனைய வாகனங்கள்)குடிதண்ணீர் விநியோக வாகனங்களுக்கான டீசல் அளவை பிரதேசசபை தீர்மானித்து வழங்கும் போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதேவேளை- இதுவரை எரிபொருள் வந்துசேராத நிலையில் நூற்றுக்கணக்கான மோட்டார் சைக்கிள்களும் முச்சக்கரவண்டிகளும் நேற்றுமுன்தினம் முதல் வரிசையில் காத்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

எரிபொருள் எப்போது வரும் என்ற விடயம் இதுவரை தெரியவரவில்லை.

(ஒ-இ)

**யாழ்ப்பாணம் மாநகரசபை**

**நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2022**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பபடிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளமுடியும்.

கேள்விப் படிவக் கட்டணம் : ரூபா. 1,000.00

கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி : **12.07.2022** தொடக்கம் **26.07.2022**
(அலுவலக நாட்களில் மு.ப. 9.00 –பி.ப 02.30 மணி வரை)

கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித்திகதி :**26.07.2022** பி.ப. 12.30 வரை

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :**27.07.2022** முற்பகல் 10.00 மணி வரை

கேள்விதிறத்தல் :**27.07.2022** முற்பகல் 10.00 மணிக்கு

➢ தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - ரூபா. 2,000.00

விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு நானாவித இறைவரிப்பகுதியில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியினுள் **27.07.2022** முற்பகல் **10.00**மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர்கள் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
மாநகர முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் பெறுவதற்கு இப்படியொரு நிலைமை

முல்லைத்தீவு, ஜூலை 12

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளையிலேயே ஒரேயொரு லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலை



யமே உள்ளது. இந்த நிரப்பு நிலையத்தில் பெற்றோலைப் பெறுவதற்காக, கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட கிராம அலுவலரின் பதிவின் கீழ் டோக்கன் அடிப்படையில் பெற்றோல் நேற்று விநியோகிக்கப்பட்டது.

பெற்றோலைப் பெறுக்கொள்ள பத்து கிலோ மீற்றருக்கும் அதிகளவான தூரத்திலிருந்து வரவேண்டியிருந்த நிலையில், எரிபொருளை மீதப்படுத்த, வாகனம் ஒன்றில் நான்கு மோட்டார் சைக்கிள்களை ஒன்றாக ஏற்றி வந்து பெற்றோலை சிலர் நிரப்பினர். (அ-ஒ-119)

## இதற்கும் வரிசை!

கொழும்பு, ஜூலை 12

போராட்டக்காரர்கள் வசம் வீழ்ந்த ஜனாதிபதி மாளிகையைப் பார்வையிட பெருமளவான மக்கள் தினமும் செல்கின்றனர். இதனால் ஜனாதிபதி மாளிகையைப் பார்வையிடவும் நீண்ட வரிசை காணப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகையைப் பார்வையிடவும் பெருமளவான மக்கள் செல்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## இன்று துக்கதினம்

கொழும்பு, ஜூலை 12

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷான்ஸோ அபேயின் உயிரிழப்பை நினைவுகூர்ந்து இன்று நாட்டின் தேசிய துக்கதினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயினும் இன்றைய தினம் அரச விடுமுறை தினம் அல்ல என பொது சேவை நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி ஜப்பானின் நாரா நகரத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரை நிகழ்வில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷான்ஸோ அபே கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### ஜூலை 20...

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைக்கு, அரசமைப்புக்குட்பட்ட வகையில் தீர்வு காண்பது குறித்தும், சர்வகட்சி இடைக்கால அரசு சம்பந்தமாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தனது பதவியை எதிர்வரும் 13ஆம் திகதி துறப்பதாக அறிவித்துள்ளதால் அவ்வாறு நடைபெறும் பட்சத்தில் நாடாளுமன்றத்தை 15 ஆம் திகதி கூட்டி, ஜனாதிபதி பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடம் குறித்து அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, வேட்புமனுக்களை கோருவதற்கும், 20 ஆம் திகதி புதன்கிழமை வாக்கெடுப்பைநடத்துவதற்கும்முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவிக்கு ஒருவர் மாத்திரம் வேட்பு மனுவை தாக்கல் செய்தால், வாக்கெடுப்பின்றி தேர்வு இடம்பெறும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிட்டால் வாக்கெடுப்புமூலம் தேர்வு இடம்பெறும்.

இதுவரையில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாஸவும், சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் டலஸ் அழகப்பெருமவும் போட்டியிடவுள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ஒ-இ)

### இடைக்கால...

மன்ற உறுப்பினர்கள் குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டாரவால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்தை கட்சியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உறுதிப்படுத்தினார். (அ-ஒ-இ)

(முன்னர் வந்த செய்தி பக்:3)

### வீட்டிலிருந்தே...

துள்ள ஊடக அறிக்கையில், பொதுமக்கள் http://bit.ly/3nPMF.vJ என்ற இணையத்தளத்தை நேரடியாகவோ, இணைக்கப்பட்டுள்ள 'கியூ ஆர் கோட்' முறையைப் பயன்படுத்தியோ தங்களது ஸ்மார்ட் தொலைபேசி, கணினி மூலம் எரிபொருளுக்கான கோரிக்கையை முன்வைக்க முடியும்.

எரிபொருள் கிடைக்கப்பெறும்போது பொதுமக்களுக்கு எரிபொருள் பெறுவதற்கான திகதி, நேரம் என்பன பதிவு செய்யப்பட்ட தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தி மூலமாக அறிவிக்கப்படும். பொதுமக்கள் குறித்த நேரத்தில் தங்களுக்குரிய எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும். எரிபொருள் கோரிக்கைக்கான இணையத்தளத்தை மாவட்டச் செயலக இணையத்தளத்தின் ஊடாகவும் அணுகமுடியும்.

இவ்வாறு அணுக முடியாதவர்கள் தமது கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தொடர்புகொண்டு இந்த இணையத்தளத்தை அணுகமுடியும் - என்றுள்ளது. (அ-ஒ-5)

### எரிபொருள்...

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 5 தினங்களாக பெற்றோல் வழங்கப்படாத நிலையில் மோட்டார் சைக்கிளை வரிசையில் நிறுத்தி விட்டு காத்திருந்தார்.

நேற்றும் பெற்றோல் கிடைக்காத நிலையில் ஓய்வெடுப்பதற்காக நகர சபை முன்பாகவுள்ள கடைப் பகுதிக்குச் சென்றபோது அவர் மயங்கி விழுந்துள்ளார். இதனையடுத்து, அவர் வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்துவிட்டாரென மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-110)

### சுமுகமுறையில்...

நடைபெறுவதை உறுதி செய்யவேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையில், இலங்கையின் முன்னேற்றங்கள் மற்றும் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஐ.நா. பொதுச் செயலர் உன்னிப்பாக அவதானித்து வருகின்றார்.

இலங்கை மக்களின் ஒற்றுமையுடன் உறுதியாக அவர் நிற்கின்றார். சுமுகமான ஆட்சி மாற்றத்துக்கும், பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வைக் காண்பதற்கும் அனைத்துத் தரப்பினரும் பேச்சு நடத்தவேண்டும்.

இதேவேளை - போராட்டங்களின் போது இடம்பெற்ற அனைத்து வன்செயல்களையும் கண்டிப்பதாக ஐ.நா. பொதுச் செயலர் குறிப்பிட்டுள்ளார். அந்தச் சம்பவங்களுக்கு பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூற வேண்டும். அமைதியைப் பேணுவது முக்கியமானது என்றும் ஐ.நா. பொதுச் செயலர் தெரிவித்துள்ளார். (அ-ஒ-5)

### மட்டுப்படுத்தப்பட்ட...

யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் மற்றும் பிரதிநிதிகள், யாழ். மாவட்டச் செயலகத்திடம் பேக்கரி உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பாக எதிர்கொண்ட இடர்பாடுகள் தொடர்பாக முன்வைத்த கோரிக்கைக்கு தீர்வாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள விசேட ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேக்கரி உற்பத்தியாளர்கள் தங்களது பேக்கரிச் சங்கம் ஊடாக தொடர்பு கொண்டு உற்பத்தி விற்பனையை தடையின்றி மேற்கொள்ள மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியுமென அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

### தீ வைப்புக்கு...

"நீங்கள்(ஹக்கீம்)கடந்த 9ஆம் திகதி கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது ருவிற்றரில் பதிவிட்ட விடயமே எனது வீடு தீக்கிரையாகக் காரணம்" என நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பெரும் வாய்த்தர்க்கமும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - நாட்டு மக்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆற்றிய உரையின்போதும் இந்த விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். (அ-ஒ-இ)

### இந்திய...

காரைநகர் கடற்படையினரின் விசேட ரோந்து நடவடிக்கையின்போதே மீனவர்கள் ஆறு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள், அவர்கள் பயணித்த இழுவைப்படகுகளுடன் மேலதிக விசாரணைகளுக்காக காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (அ-ஒ-27)

### பெற்றோல்,...

பணம் செலுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி வரவேண்டிய இந்தக் கப்பல்கள், வானிலை சீர்கேடு காரணமாகத் தாமதமாகிவிட்டதாகவும், சரியான நேரத்தில் எரிபொருள்களை கப்பலில் ஏற்றிக்கொள்ள முடியவில்லை என்றும் அவர் கூறினார். இந்நிலையில் எரிபொருள்களுடன் கப்பல் நேற்றுமுன்தினம் காலை இந்தியாவிலிருந்து புறப்பட்டதை விநியோகஸ்தர்கள் உறுதிப்படுத்தியுள்ளனரென அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை - மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் உதவியுடன் டீசல் மற்றும் பெற்றோல் கப்பல்களுக்கான முழுக் கொடுப்பனவுகளும் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார். (அ-ஒ-இ)

### முப்படைத்...

கூறப்படும் ஜனாதிபதி, நேற்று நாடு திரும்பி முப்படை தளபதிகளை சந்தித்துள்ளார் என்று தெரியவருகின்றது.

ஜனாதிபதி நாளை பதவி விலகிய பின்னர் வெளிநாட்டுக்குச் செல்லவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பில் அழிந்துபோன சொத்துக்கள் நூல்களே!

## ரணில் விக்கிரமசிங்க கவலை



**கொழும்பு, ஜூலை 12**

**நெருப்பில் அழிந்துபோன சொத்துக்கள் நூல்கள்தான் இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பிரதமரின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள காணொலி ஒன்றின் ஊடாகவே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப 4 ஆண்டுகள் தேவை என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. முதலாவது வருடமே மிகக் கடுமையானதாக இருக்கும். எனக்கென இருந்த ஒரேவீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. அதில் அழிந்துபோது சொத்துக்கள் நூல்களாகும். போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் கால நூல்கள் உட்பட 2 ஆயிரத்து 500 நூல்கள் இருந்தன. எனது காலத்தின் பின்னர் அந்த நூல்களை நாட்டின் பல இடங்களிலும் அன்பளிப்பாக வழங்கத் தீர்மானித்திருந்தேன். அவற்றை விடப் பழைய காலத்துச் சித்திரங்கள் இருந்தன. இப்போது ஒன்று மட்டுமே எஞ்சியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தின்படி தான் பதவி விலகத் தயார் என்று ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அறிவித்துள்ளார். (எ-இ)



கொழும்பில் லிட்ரோ சமையல் எரிவாயு விநியோகம் நேற்று ஆரம்பமாகியுள்ளது. பம்பலப்பிட்டியில் மக்கள் வரிசையில் சென்று சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுச் செல்வதை அவதானிக்க முடிந்தது. (எ-இ)











மக்கள் பார்வையிட ஆரம்பித்த பின்னர் ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகை என்பவற்றின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளன. (ஓ-5)

**Canada Study & Work Program**

**The program is suitable for:**

*. Farm related occupations, *. Hospitality, *. Nurses, *. Accountants,
*. Engineer, *. IT Professionals, *. Educated Professionals,
*. Pharmacists, *. Medical & Healthcare, *. Technician,
*. Baker, *. Carpenter, *. Mechanics, *. Painter & Decorator, *. Artist and etc....
Who have done the "A/L, diplomas and degree; they can apply for these programs. (No need IELTS)"

**Visa Consultant**
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. Tel: 0770385584
naltcjaffna@gmail.com

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



**அமரர் பெரியசாமி சிவஞானம்**

கடந்த 14.06.2022 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உலகின் பல பாகங்களில் இருந்து தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாக அனுதாபங்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி சுவரொட்டிகள், பதாகைகள், மலர் வளையங்கள் மூலமாக அனுதாபங்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும், பத்திரிகைகள் மூலமாக கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றிய வர்களுக்கும், இக்கணம் வரை எமது தேவைகளை பூர்த்தி செய்து தோளோடு தோள் நின்ற அன்புள்ளங்களுக்கும் இவ்வேளையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (13.07.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பம் சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

No. 116, K.K.S Road, Kokkuvil, Jaffna.
குடும்பத்தினர்
+ 601161415437,077 991 2363, 077 918 4511
(CS 19919) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

"எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறு ஆவதில்லை. வரலாறாக ஆனவர்கள் தனக்காக வாழ்ந்ததில்லை" - காமராஜர்


## வரங்களைச் சாபமாக்க அனுமதியாதீர்!

வரலாற்றின் திருப்புமுனைப் புள்ளியில் நிற்கின்றது இலங்கை. நாட்டினதும், மக்களினதும் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பொன்னான வாய்ப்பொன்று இலங்கையர் முன்னே காலத்தின் வரமாகக் கிடைத்திருக்கின்றது. ஆனால் அந்த வரத்தையும் தங்கள் பழக்கதோஷத்தால் சாபமாக மாற்றும் நடவடிக்கையிலேயே அரசியல்வாதிகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் புரட்சியின் விளைவின் பின்னரும் கூட அரசியல்வாதிகளின் செயற்பாடுகளில் மாற்றம் எதுவும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஜனாதிபதியும், பிரதமரும், அரசாங்கமும் கூண்டோடு விலகவேண்டும் என்ற மக்களின் குரலைச் செவிசாய்க்காது – அதிகாரத்தை எவ்வாறு தக்க வைக்கலாம் என்ற குயுக்தியுடனேயே – அரசியல்வாதிகளின் இப்போதைய நகர்வுகள் இருக்கின்றன. இந்தப் போக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை இன்னும் இன்னும் அதிகரிக்கவே செய்யும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாளை பதவி விலகுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதமரின் பதவி விலகல் தொடர்பில் இன்னமும் தெளிவான நிலைப்பாடு காணப்படவில்லை. இந்தநிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் தற்போதைய நிலைமையில் பிரதமரின் பதவி விலகலுக்கு அரசமைப்பின்படி சாத்தியம் இல்லை என்ற சாரப்படக் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

ராஜபக்ச சகோதரர்களும் சரி, ரணில் விக்கிரமசிங்கவும் சரி நாட்டை இதுவரை ஆட்சி செய்த பிரதான கட்சிகளைத் தவிர்த்து வேறு தரப்பிடம் அதிகாரம் செல்வதை எள்ளளவும் விரும்பமாட்டார்கள். அவ்வாறு ஆட்சி அதிகாரம் வேறு தரப்புக்குச் செல்லுமானால், இத்தனை ஆண்டுகள் தாம் செய்த அத்தனை தில்லுமுல்லுகளும் வெளியாகிவிடும் என்ற அச்சமே இதற்குப் பிரதான காரணம். அதனால் இரு கட்சியினரும் ஒருவரை ஒருவர் காப்பாற்றிக் கொள்ளவே முயற்சிப்பார்கள். எவரும் நினைத்துப்பார்க்க முடியாத மக்கள் புரட்சியொன்று நாட்டில் உருவாகியுள்ள நிலையில் மக்கள் எதிர்ப்பையும் கருத்தில் எடுக்காது அவர்கள் இத்தனை காலம் பதவியில் நீடித்தமைக்கும் இதுவே காரணம். மீண்டும் தகிடுதத்தங்கள் செய்து எவ்வாறாவது தங்களின் கைப்பொம்மைகளாகச் செயற்படக்கூடியவர்கள் பதவிக்கு வருவதையே ஆட்சியாளர்கள் விரும்புவார்கள். ஏனெனில் அப்போதுதான் தாம் நினைத்தபடி இந்த நாட்டின் அதிகாரத்தை மறைமுகமாகத் தங்கள் கையில் தொடர்ந்தும் அவர்கள் தம்வசம் வைத்திருக்க முடியும். எனவே அதற்கான காய்நகர்த்தல்களையே ராஜபக்சக்களும், ரணிலும் மேற்கொள்வார்கள். கொழும்பு அரசியலில் இப்போது அதுவே நடந்து கொண்டிருக்கின்றது.

அரசியல்வாதிகளின் சித்து விளையாட்டுகளுக்கு ஏமாந்து போய், கிடைத்த வரத்தை – சந்தர்ப்பத்தை சாபமாக மாற்றும் முயற்சிகளை மக்கள் அனுமதிக்கவே கூடாது. கால இழுத்தடிப்புக்களால் மக்கள் எழுச்சியைத் தணித்துவிட முடியும் என்ற அதிகாரத்திலுள்ளவர்களின் கணிப்பைப் புரிந்து, மக்கள் நடந்து கொள்ளவேண்டும். இப்போது எழுந்துள்ள மக்கள் எழுச்சியைக் கட்டிக்காத்து, நிலையான தீர்வொன்றைப் பெற்றுவிட வேண்டியது காலத்தின் தேவை. இப்போது கிட்டியுள்ளது, வராது வந்த மாமணியான பொன்னான வாய்ப்பு. இதையும் இழப்போமானால் இலங்கை நாசமாகிப் போன தேசமாவதை எப்போதும் தடுக்கமுடியாது. 'இப்போதில்லாவிட்டால் எப்போதுமில்லை' என்பதை மனதில் கொண்டு அரசியல்வாதிகளின் சூழ்ச்சிகளை முறியடித்து, சகல இனத்தவர்களுக்கும் பொருத்தமான, நிரந்தரத் தீர்வு தரக்கூடிய அரசமைப்பை உருவாக்கி, நாட்டின் முன்னேற்றத்துக்குப் பொருத்தமான நபர்களை இனங்கண்டு, நாளைய இலங்கையை நல்லதொரு நாடாக்கும் வரை மக்கள் விழிப்போடும், இப்[illegible] புரட்சியின் தகிப்போடும் இருப்பது முக்கிய[illegible]



# ராஜபக்சக்கள் கோரினால் இந்திய இராணுவ உதவி

## பா.ஜ.கவின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி கருத்து



**கொழும்பு, ஜூலை 12**

**முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் அவர்களுக்கு ஆதரவாக இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டும் என பா.ஜ.க.வின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"கோத்தாபய மற்றும் மஹிந்த ராஜபக்ச இருவரும் சுதந்திரமான தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்தகைய சட்டபூர்வமான தேர்தலை ஒரு கும்பல் கவிழ்க்க இந்தியா எப்படி அனுமதிக்கும்? அப்படியானால் எமது அயலவராக உள்ள எந்த ஒரு ஜனநாயக நாடும் பாதுகாப்பாக இருக்காது. இந்தியாவின் இராணுவ உதவியை ராஜபக்சவினர் கோரும்போது நாங்கள் வழங்கத் தயார்" - என்றுள்ளது.

(ம)

# இலங்கை மக்களுடன் இந்தியா நிற்கின்றது!

## இந்தியத் தூதரகம் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 12

சுப்பிரமணியம் சுவாமி, 'ராஜபக்சக்கள் கோரினால், இந்தியா தனது இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பும்' என்று வெளியிட்ட கருத்து சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், அதை இந்தியத் தூதரகம் மறுத்துள்ளது.

'இந்தியா, இலங்கை மக்களின் அபிலாஷைகளுடன் துணை நிற்கின்றது' என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சு.சுவாமியின் பதிவை அடுத்து, இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்புமா? என்ற கேள்வி ஒருபுறமும், சுப்பிரமணியன் சுவாமிக்கும் இந்திய அரசாங்கத்துக்குமான எதிர்ப்பு மறுபுறமும் எழுந்த நிலையிலேயே இந்தத் தெளிவுபடுத்தலை தூதரகம் வழங்கியுள்ளது.

'இந்த அறிக்கைகள் மற்றும் அத்தகைய கருத்துக்களின் நிலைப்பாட்டுக்கு ஏற்ப இந்திய அரசாங்கம் இல்லை. ஜனநாயக வழிமுறைகள் மற்றும் மதிப்புகள், அதன்படி நிறுவப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அரசமைப்பு கட்டமைப்பின் மூலம் செழிப்பு மற்றும் முன்னேற்றத்துக்கான அபிலாஷைகளை நனவாக்க முயலும் இலங்கை மக்களுடன் இந்தியா நிற்கிறது என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஏற்கனவே தெளிவாகக் கூறியுள்ளார்' என்று இந்தியத் தூதரகம் தனது கருத்தை ஆணித்தரமாகப் பதிவுசெய்துள்ளது.

(ம)

13.07.2022
புதன்கிழமை
ஆனி 29
சுபநேரம் : 04.29 – 05.59
ராகுகாலம்: 11.59 – 01.29
பூரணை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லன எல்லாம் தரும் நயினை நாகபூசணித் தாய்



■ நயினை விசு இராசநாயகம்

வட இலங்கையிலே வரலாற்று மகிமையும் வழிபாட்டுச் சிறப்பும் கொண்ட நாற்புறமும் கடலால் சூழப்பட்ட சப்ததீவுகளில் மணிபல்லவம் எனப்படும் தனிப்பெரும் சிறப்புமிக்கது நயினாதீவு. அங்கு அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள பதியே நயினையம் பதியாகும். சக்தி பீடங்கள் 64 இனுள் புவனேஸ்வரி பீடம் எனும் தனிச் சிறப்பை அன்னையவள் பெற்று விளங்குகிறாள். அம்பிகையின் மூல விக்கிர தோற்றம் அதன் வரலாறு என்பன இன்னமும் கண்டறிய முடியாத அதிசயமாகவே காணப்படுகின்றது.



நயினை நாகபூசணி அம்பிகையின் அருளாசி தனிச்சிறப்பானது. தாய்மையுற மும்மலங்களின் தீமைகள் போயகல வழிப்படுத்துவது. பக்தியோடு அடியவர்கள் கூடிநின்று அம்பிகையின் சந்தம் இசைத்திட இன்பநிலை தருவது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ நற்கருமங்களின் பொருள் பேசுவது நம்பிக்கையோடு வழிபாடு இயற்றும் அடியவர்களது துன்பங்களையும் நோய் நொடிகளையும் நீக்கியருளும் சக்தியாகவும் குழந்தைப் பேறு இல்லாதோர்க்கு, குழந்தைப் பேறளிக்கும் பேரருள் சக்தியாக அன்னை நாகபூசணி அருளாசி புரிகிறாள். ஆலய கிழக்குவாயில் கோபுரம் நூற்று எட்டு அடி உயரத்தை கொண்டமைந்துள்ளதுடன் ஆலயத்துக்கு அலைகடல் தாண்டி வருகை தருகின்ற அடியவர்களுக்கு பக்தியின் பரவசத்தை உவந்தளிக்கின்றது.

## நாகபூசணி என்ற பெயர்வரக் காரணம்

நயினாதீவுக்கு அண்மித்தாக அனலை தீவு என்னும் ஓர் அழகிய தீவு உண்டு. அதன் தெற்குப் பகுதியில் புளியந்தீவு எனும் சிறிய தீவு அமைந்துள்ளது. அங்கு வரலாற்றுடன் கூடிய நாகதம்பிரான் ஆலயம் ஒன்று உண்டு. அந்த ஆலயத்தில் இருந்து நாகபாம்பு பூக்களைக் கொண்டு வந்து அம்மனைப் பூசித்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறு நாகம் பூசித்து வந்தமையால் நாகபூசணி எனப் பெயர் வரக்காரணமாயிற்று.

ஆலயத்தின் வரலாற்றுச் சின்னமாக ஆலயத்தின் வடக்குக் கடல் பகுதியில் இரு கற்கள் காணப்படுகின்றன. அதில் ஒரு கல், 'பாம்பு சுற்றிய கல்' எனவும் மற்றைய கல், 'கருடன் கல்' எனவும் அழைக்கப்படுகின்றன. நாகபாம்பு அம்மனுக்குப் பூக்கொண்டு வந்தவேளை கருடன் பாம்பை இடைமறித்ததாகவும் பாம்பு கல்லில் சுற்றிக்கொண்டதாகவும் கருடன் மற்றைய கல்லின் மீது அமர்ந்து கொண்டதாகவும் கூறப்படுகின்றது. அந்தச் சமயம் கடல்வழியாகப் படகு மூலம் வியாபார நோக்கத்துக்காகச் சென்ற வணிகச் செட்டியார் அந்தக் காட்சியை நேரில் கண்டு மனமுருகி அம்மனை நோக்கி வழிபாடு செய்ததாகவும், பின்பு கருடன் அவ்விடத்தை விட்டு நீங்கியதாகவும், பின்பு நாகம் பூக்களைக் கொண்டு சென்றதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

ஆலய பெருந்திருவிழா காலத்தில் பதினோராம் திருவிழா அன்று இவ்விரு கற்களுக்கும் விசேடபூசை விழிபாடுகள் இடம்பெறுகின்றன. அவ்வேளை அப்பகுதியில் கருடன் பறந்து காட்சி தருவதை பக்தர்கள் நேரில் கண்டு பக்திப் பரவசமடைவார்கள். இந்தக் கற்கள் இரண்டையும் ஆலயம் புனித சின்னமாகப் பாதுகாத்து வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆலயத்துக்கு வரும் அடியார்கள் கடல் வழியாக நடந்து சென்று இந்தக்கற்களை வழிபாடு செய்து வருகின்றனர்.

## அன்னையின் அருளாசி

இவ்வாலயம் நாட்டின் பல பாகங்களிலிருந்து வரும் பக்தர்கள் கூடும் யாத்திரைத் தலமாக விளங்குகின்றது. இவ்வாலயத்தில் தங்கியிருந்து அடியவர்கள் நாகதோஷ நிவர்த்தி, ஏனைய பரிகார கிரிகைகள் செய்து வருகின்றனர். பௌர்ணமி தினங்களில் மாதந்தோறும் ஸ்ரீசக்கர பூசை இடம்பெற்று வருகின்றது. திருமணமான பெண்கள் தாலிப்பாக்கியம் நிலைத்திட அம்பிகையை வேண்டி வழிபாடு இயற்றுகின்றனர்.

மேலும் ஆலய காரியாலயத்தில் ஐயாயிரம் ரூபா வைப்பிலிடும் குடும்பத்தாரின் பிறந்தநாள், திருமணநாள், தந்தை, தாயாரின் நினைவுநாள் போன்ற விசேட தினங்களில் அவர்களது பெயர்களில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று, அவர்களது முகவரிக்கு விபூதி பிரசாதம் அனுப்பி வைப்பதோடு அன்றையதினம் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த அன்னதான சேவையை திறம்பட நடத்திவரும் ஆலய அறங்காவலர் சேவை என்றுமே போற்றுதற்குரியது.

ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு அமுதசுரபி அன்னதான சபையினர் இரவு, பகல் அன்னதான சேவையை வழங்கி வருகின்றார்கள். ஆலய தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தம்பையா தாகசாந்தி நிலையத்தில் வழமை போன்று தாகசாந்தி இடம்பெறுகின்றது. ஆலய முன்வாயிலில் அபிவிருத்திச் சபையும் தாகசாந்தியை வழங்கிவருகின்றது. சாரணர்படை, யாத்திரிகர் தொண்டர்சபை, சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, கடல் பாதுகாப்புச் சேவை என்பன சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன.

## அம்பிகையைப் பணிவோம்

இன்றையதினம் அம்பிகையின் இரதோற்சவ நிகழ்வில் அடியவர்கள் அனைவரும் கலந்துகொண்டு அவள் அருளாசியை நாடுவோம். அம்பிகையின் தேர்வடம் பிடித்தால் மிகப்புண்ணியம் கிட்டும். வடம்பிடித்தவர்கள் அம்பிகையின் திருவடியில் இடம்பிடித்தவர்கள் ஆவர். தேர்த்திருவிழா அழித்தலையும் தீர்த்தத்திருவிழா அருளலையும் குறிக்கும். எல்லோர்க்கும் நயினை நாகபூசணித்தாய் நல்லன எல்லாம் தந்தருளவும் நல்வாழ்வு என்னும் பேற்றை வழங்கவும் பிரார்த்திப்போம். ■

## அலைகடல் ஆர்ப்பரிக்க தேற்றிடுவாய் எம்தாயே!

அலைவந்து தாலாட்டுப் பாடும் அன்னை
அருளாட்சி நாடெங்கும் ஓங்கும்
கலைமேவு நகர் நயினை நாகத்தாள் எமை
காலமெல்லாம் காத்து நிற்கும் தெய்வமன்றோ..!

வான்மழை காணாப் பயிர்போலே நிதம்
வாடிடும் உள்ளத்தில் வளம் கொடுப்பாய்
தேன் மழை போலருள் வெள்ளமாய்ப் பொழியும்
தெய்வம் நீயம்மா தேற்றிடு நாகபூசணியே

பாம்பாய் வடிவெடுத்து பலபாவம் தீர்ப்பாள்
வேம்பாய் உருவெடுத்து வினையோட்டுவாள்
நீங்கா பற்றுறுதியோடு பாதம் பணிந்தால் அன்னை
நித்திலமே புகழ்ந்தேத்தும் நிலையான வாழ்வளிப்பாள்

நின்னை சரணடைந்தேன் நாகேஸ்வரி
நிலவுலகில் துணையில்லை நாகேஸ்வரி
பொன்னை பெரிதென்பார் நாகேஸ்வரி இந்த
பிள்ளைக்கு நீயன்றி யாரம்மா நாகேஸ்வரி

**கா.தவராஜசுந்தரம்,**
கிளி. வட்டக்கச்சி மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூவுலகம் வணங்கும் தாயே!



நயினை வாழும் நாயகியே
வாழ்வில் துன்பங்கள் இல்லை
உனை நினைத்தால் தீவினை யாவும் விலகுமே
பக்தியோடு உன் பாதம் சரண் புகுந்தால்
மூவுலகம் பக்தியோடு போற்றி வணங்கும்
என்றும் உனை மனதில் இருத்திக் கொண்டாடுவோம்

**சு.ஜெயரூபன்,** பருத்தித்துறை.




**500,000/-** ரூபாயால் ஆரம்பிக்கப்படும் 100 நாட்களின் நிலையான வைப்புக்கு **17.5%**(வ.வ.) வரையான கவர்ச்சிகரமான வட்டி!

- குறுகிய காலத்தில் அதிக நன்மைகள்
- சந்தைப் பெறுமதியிலும் அதிஉயர் வட்டி வீதம்
- வைப்புகளுக்கு முழுமையான பாதுகாப்பு

| வைப்பின் பெறுமதி (ரூ) | காலஎல்லை | வட்டிவீதம் (வ.வ.) | வ.உ.வ. |
|---|---|---|---|
| 500,000 - 1,499,999 | 100 நாட்கள் | 15.5% | 16.42% |
| 1,500,000 - 2,499,999 | | 16.5% | 17.54% |
| 2,500,000 அல்லது அதற்கு மேல் | | 17.5% | 18.67% |

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் அல்லது 1975 அழைப்பு மையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

உ
கணபதிதுணை

# சாவகச்சேரி
# கல்வயல் பெருங்குளம்
# அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
## 2022 சுபகிருது வருஷ ப்ரம்மோற்சவத்தின்
## இரதோற்சவ - தீர்த்தோற்சவ சிறப்பு மலர்



### இரதோற்சவம்
ஆனிமாத சுக்லபக்ஷ
சதுர்த்தசி தினம் இன்று
(12.07.2022)
செவ்வாய்க்கிழமை
முற்பகல் 10.00 மணி



### தீர்த்தோற்சவம்
ஆனிமாத பௌர்ணமி
தினம் நாளை
(13.07.2022)
புதன்கிழமை
முற்பகல் 10.00 மணி

### புவனத்தை காக்க தேரேறி வரும் வீரகத்தி விநாயகர்



ஆலய மஹோற்சவக் குரு
சிவஸ்ரீ சோ.சக்திதரக்குருக்கள்
சிவஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தக் குருக்கள்



உலகமெல்லாம் நிறைந்து விளங்கும் எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகர் உலக மக்களைக் காக்க தேரேறி அருள் பாலிக்க வருகிறார். கொடிய நோயின் தாக்கத்திலிருந்து மக்களை காத்து இரண்டு வருடங்களின் பின் அழகிய திருத்தேரில் ஆரோகணித்து சம்காரத் தொழிலை நிறைவேற்ற அடியவர் கூட்டம் அகம் மகிழ அருள் மழை பொழிய அம்பலவாண வீரகத்தி விநாயகர் பவனி இனிதே நிறைவேற அம்பலவாண வீரகத்தி விநாயகர் பாதம் பணிந்துவோமாக...

### ஆலய தர்ம பரிபாலகர்களின் எண்ணக்கருக்களின் சில துளிகள்

உச்சியில் மகுடம் மின்ன ஒளிர்தர நுதலினோடை வச்சி மருப்பில் ஒற்றை மணிகொள் கிம்பரி விளங்க மெய்ச்செவிக் கவரி தூங்க வேளமா முகம் கொண்டு உற்ற அகிலாண்ட நாயகனாகிய எமது அம்பலவாண வீரகத்தி விநாயகப்பெருமான் சர்வ அலங் காரங்களுடன் சித்திரத்தேரினில் ஆரோகணிந்து பஞ்ச கிருத்திய காரணனாக இவ்வருடம் அடியவர்களுக்கு அருள் பாலிக்கின்றார். கடந்த இருவருடங்களாக தடைப்பட்டிருந்த எம்பெருமானின் ப்ரம்மோற்சவ நிகழ்வுகள் இவ்வருடம் புதுமெருகுடனும் பூரண பொலிவுடனும் நிகழ அவர் அருட்கடாட்சம் புரிந்துள்ளார். எல்லா உயிர்களும் இன்புற்றுவாழவும் அடியவர்கள் சகலருக்கும் நித்திய நிரந்தர சுகசீவப்ராத்தி அடையவும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து சகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வு சித்திக்கவும் விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

எமது ஆலயத்திற்கு ஒரு நித்திய பூஜகருக்கு உரிய வதிவிடம் இல்லாத நிறைவு இன்மை காணப்படுவதனால் பூஜா காலக்கிரமங் களிலும் ஒரு நிறைவு இன்மை காணப்படுகின்றது. இதனை நிவர்த் திக்கு முகமாக ஒரு சிறிய அடக்கமான "பூஜக குரு நிவசம்" அத்தி யாவசியமாகின்றது. இதற்கு உரிய வழிவகைகளை காட்டுமாறு விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய தர்மபரிபாலன சபை சார்பாக**

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| வே.முருகதாசன் | இ.கிருஷ்ணசாமி |

## இரதோற்சவம், தீர்த்தோற்சவம் சிறப்புற பிரார்த்திப்பவர்கள்
### சாவகச்சேரி பிரபல வர்த்தகர்
# சண்முகம் அன்ட் சன்ஸ்
கண்டி வீதி, சாவகச்சேரி.

(CR 36635) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















## ஆசிரியருக்கான கடிதம்

# சுகாதாரச் சீர்கேடு சீராகுமா?

சிவன் பண்ணை வீதிக்கும் மானிப்பாய் வீதிக்கும் இடையிலான வெள்ளாந்தெரு வீதி வடிகாலில் கழிவுநீர் வடிந்தோடாமல் வீதியில் தேங்குவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. இந்த வீதியில் மூன்று சைவ ஆலயங்கள் உள்ள நிலையில் அவற்றுக்கு வரும் அடியார்களும் இலக்கண சுவாமிகள் அறநெறிப் பாடசாலைக்கு வரும் மாணவர்களும், வழிப்பயணிகளும், குறித்த பகுதியில் வசிப்போரும் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

யாழ். மாநகரசபையைப் பொறுத்தவரை பல வருடங்களாக இந்த வடிகால் தொடர்ந்தும் தொல்லையைக் கொடுத்துக் கொண்டு இருப்பதும் உணரப்படுகின்றது. சேதமடைந்து காணப்பட்ட இந்த வடிகால் மாநகர சபையினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட போதிலும், முன்னைய குறைபாடு மீண்டும் தொடரவே செய்கிறது. மாநகர சபையின் நிதி இங்கு விரயமாக்கப்பட்டுள்ளதோ (?) என எண்ணத் தோன்றுகிறது.

குறித்த வடிகாலின் கழிவுநீர் மானிப்பாய் வீதியை ஊடறுத்துச் சென்று அதன் ஓரமாக இருக்கும் பெரிய வடிகாலில் சேர்கிறது. இந்த இணைப்பு வடிகால் பகுதியில்தான் குறைபாடு உள்ளதாகவும் வடிகாலுக்கு மேலாக சிமெந்துத் தட்டுக்களைப் பதித்து வீதி அமைத்தபோது, பதிக்கப்பட்ட சிமெந்து தட்டுக்களில் ஒன்று சரியாக பொருத்தப்படாமையால் வடிகாலின் குறுக்காக வீழ்ந்து வடிகாலை அடைத்துள்ளதாக அங்குள்ளோர் தெரிவிக்கின்றனர்.

எனவே, மாநகரசபை அதிகாரிகள் இந்த விடயத்தில் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொண்டு, வீதிச் சுகாதாரச் சீர்கேட்டை நிவர்த்தி செய்து உதவவேண்டுமென மிகவும் விநயமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கி.வே.கிருஷ்ணானந்தன்,
சிவன்பண்ணை வீதி.

# மழைக்கு சாத்தியம்



கொழும்பு, ஜூலை 12
சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

கொழும்பில் இருந்து காலி வரையான கடற்கரைக்கு அப்பாற்பட்ட கடல்பகுதிகளில் சிறிதளவு மழை பெய்யக்கூடும். அத்துடன் காற்றானது மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் மேற்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40- 50 கி.மீ. வேகத்திலும், மேற்கு முதல் தென்மேற்கு திசையில் 30-40 கி.மீ வேகத்திலும், நீர்கொழும்பிலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கடல்நிலையானது நீர்கொழும்பில் இருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

எனவே மின்னல் தாக்கம், கொந்தளிப்பு போன்றவற்றால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ய-இ)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூலை 12
இந்து சமய, கலாசார அலுவல்கள் [illegible] மணிக்கு சுன்னாகம் கந்தரோடை கோட்டம்கட்டு ஞானவைரவர் கோயிலின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ [illegible] கோபாலசர்மாவின் அருளாசியுரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. (ம-14)

# சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 12
நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு, எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் தலைமையுரையை ஆலயத்தின் பரிபாலன சபைத்தலைவர் த.சோதிலிங்கம் ஆற்றவுள்ளார். 'முருகவழிபாடும் பக்தியாளர்களும்' என்ற கருப்பொருளில் இளம்சைவப்புலவர் நித்தியபாபுதரன் உரையாற்றவுள்ளார். (ம-14)

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் நடைபெற்று வரும் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசை நிகழ்வும்' என்ற தொடரின் 29ஆவது சொற்பொழிவு நிகழ்வு, எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு ஸ்ரீ கதிரேசன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூசை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமானின் சமயப்பணி' என்னும் கருப்பொருளில் இளம்சைவப் புலவர் ச.நவநீதன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org